பக்கங்கள்: 12

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 புரட்டாதி 12 வெள்ளிக்கிழமை 29.09.2023 கதிர் 322

# முல்லை நீதிபதிக்கு உயிர் அச்சுறுத்தல்

## அதனால் பதவி விலகினார்; அவர் நீதிச் சேவை ஆணைக்குழுவிற்கும் அறிவிப்பு

(ந.லோகதயாளன்.)

உயிர் அச்சுறுத்தல் மற்றும் மன அழுத்தங்கள் காரணமாகத் தனது பதவியிலிருந்து விலகியிருக்கிறார் முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி ரி.சரவணராஜா.

முல்லைத்தீவுகுறுந்தூர்மலைதொடர்பானவழக்கைவிசாரித்துவந்தவரான நீதிபதிசரவணராஜா,அதற்காகசிங்கள நாடாளுமன்ற உறுப்பினர்களால் கடுமையான விமர்சனங்களுக்கு உள்ளாகிஇருந்தார். இந்த நிலையில் செப்டெம்பர் 23 திகதியிட்டு நீதிச் சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளருக்கு அனுப்பி வைத்த கடிதத்தில் தனது பதவி விலகலை அறிவித்துள்ளார்.

உயிர் அச்சுறுத்தல் மற்றும் தொடர்ச்சியான மன அழுத்தம் காரணமாக நீதித்துறை சார்ந்த ☞ 2

# இது ரகசியம் அல்ல!

டயானா கமகே என்கிற அம்மணியை எங்கிருந்து பிடித்து வந்தார்களோ தெரியாது. ஆனால், அந்தம்மா இதுவரைக்கும் இலங்கையர்களிடம் இருந்து வந்த அடிப்படைக் கொள்கைகளை அப்படியே தலைகீழாகப் புரட்டிப் போட்டு நாட்டை ''எங்கேயோ'' கொண்டு சென்றுவிடுவார் போன்றுதான் தோன்றுகின்றது.

சுற்றலாத்துறைக்கான இராஜாங்க அமைச்சராகப் பதவி வகிக்கிறார் அம்மணி. ஐக்கிய இராச்சியம் (லண்டன்)குடியுரிமைகொண்டவரான இவர் மீது நீதிமன்றத்தில் வழக்கு நடக்கிறது. வெளிநாட்டவரான இவர் நாடாளுமன்றஉறுப்பினராகமுடியாது என்றஅடிப்படையில்தொடுக்கப்பட்ட வழக்குதீர்ப்பைநெருங்கிநிற்கின்றது. அந்தத் தீர்ப்பு இவருக்குச் ☞ 2

# கடன் பெறச் சென்றவர்கள் அதைச் சரியாக செய்யட்டும்

## மகிந்த ராஜபக்ஷ தெரிவிப்பு

சர்வதேச நாணய நிதியத்திடம் கடன் பெறச் சென்றவர்கள் அதனைச் சரியாகச் செயற்படுத்த வேண்டும். எமது காலத்தில் இவ்வாறான பிரச்சினைகள் காணப்படவில்லை என்று முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

மீரிகமவுக்கு நேற்றுச் செய்த முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மக்குவெல விமலரத்ன தேரரைச் சந்தித்து ஆசீர்வாதம் ☞ 2

# நீதிபதியின் வெளியேற்றம் நீதித்துறைக்கு சாட்டையடி

## சிறீதரன் எம்.பி. தெரிவிப்பு

(ந.லோகதயாளன்)

முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்ற நீதிபதி சரவணராஜா உயிர் அச்சுறுத்தல்கள் காரணமாக, தனது பதவிகளையும், பொறுப்புகளையும் துறந்து வெளியேறியுள்ளமை இந்தநாட்டின் நீதித்துறையினது சுயாதீன இயங்கு நிலையை அடியோடு ஆட்டம் காணச் செய்துள்ளது என நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

நீதிபதி சரவணராஜா அவர்கள் 2023.07.04 தனது கடமை நிமித்தம் குருந்தூர்மலைக்கு சென்றிருந்தபோது தெரிவித்த கருத்துகளை மேற்கோள்காட்டி 2023.07.07 அன்று நாடாளுமன்ற உரையிலும், அதன்பின்னர் பொதுவெளியிலும் முல்லைத்தீவு மாவட்ட நீதிபதியை, நாடாளுமன்ற உறுப்பினர் சரத்வீரசேகர ☞ 2

# 13இனை நடைமுறைப்படுத்த இந்திய கரிசனை அவசியம்

## முன்னாள் முதலமைச்சர் விக்னேஸ்வரன் வலியுறுத்து

இலங்கை அரசின் அனுசரணையோடு தமிழ் மக்களுக்கு எதிரான நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ள நிலையில் 13 ஆவது திருத்தத்தை அமுல்ப்படுத்தி மாகாண சபைகளை உருவாக்கி அதிகாரங்களை வழங்க வேண்டியது முன்னரை விடவும் இப்போது அவசியம் என தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சீ.வீ.விக்கினேஸ்வரன் தெரிவித்தார்.

இந்த 13 ஆவது திருத்தத்தை அமுல்ப்படுத்த வேண்டுமென இந்தியாவும் அமுல்ப்படுத்தப் போவதாக இலங்கையும் தெரிவித்திருந்த நிலையில் அதற்காக முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகளில் தாமதம் ஏற்படுவதால் இந்த விடயத்தில் ☞ 2

## இந்தியப் பிரதமரைச் சந்திப்பது குறித்து

# ஜனநாயகக் கூட்டணி தலைவர்கள் விக்கியுடன் இன்று சந்தித்துப் பேச்சு

(ந.லோகதயாளன்)

இந்தியப் பிரதமரைச் சந்திக்கும் சி.வி.விக்னேஸ்வரனின் கோரிக்கை தொடர்பில் ஜனநாயகத் தமிழ்த் தேசியக்கூட்டணிஇன்று விக்னேஸ்வரனைச் சந்திக்கின்றனர்.

ஜனநாயகத்தமிழ்த் தேசியக் கூட்டணியின் அங்கத்துவக் கட்சிகளின் தலைவர்கள் இடையேயன கூட்டம் நேற்றுயாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது. அதிலெடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு அமைய இன்றைய தினம் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் ☞ 2

# நாணய நிதியத்துடன் பேச்சு தொடர்கிறது

## ஜனாதிபதி சொல்கிறார்

சர்வதேச நாணய நிதியத்தின்இரண்டாவது தவணைக் கடனை பெற்றுக்கொள்வதற்கான பேச்சு சாதகமான முறையில் இடம்பெற்று வருவதாக தெரிவித்த பதில் நிதி அமைச்சர் செஹான் சேமசிங்க, அரசினால் முன்னெடுக்கப்படும் பொருளாதார மறுசீரமைப்பு வேலைத்திட்டங்களுக்க சர்வதேச ☞ 2

# தேர்தல் அறிவிப்பு வெளியானதும் புதிய அரசியல் கூட்டணி உதயம்

## இராஜாங்க அமைச்சர் அனுப பஸ்குவல் தெரிவிப்பு

2024 ஆம் ஆண்டு ஜனாதிபதியாகும் தகைமை ரணில் விக்கிரமசிங்கவுக்கே உள்ளது. ஜனாதிபதிதேர்தலுக்கான உத்தியோகப்பூர்வ அறிவிப்புவெளியானதும் புதிய அரசியல் கூட்டணி உதயமாகும். பலர் அரசியல் கூட்டணியில் ஒன்றிணைவார்கள் என்று நலன்புரி சேவைகள் இராஜாங்க அமைச்சர் அனுப பஸ்குவல் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற நிகழ்வின் பின்னர் ☞ 8

# பொருளாதாரம் தொடர்ந்து வீழ்ச்சி தலைவர்களோ வெளிநாட்டுகளில்

## எதிர்க் கட்சித் தலைவர் சாடல்

நாடுதொடர்ந்துபொருளாதார வீழ்ச்சியைச் சந்தித்தாலும் நாட்டின் தலைவர்கள் தொடர்ந்தும்வெளிநாடுகளுக்கான பயணத்தினை மேற்கொண்டு வருகின்றனர் என்று எதிர்க்கட்சித் தலைவர்சஜித்பிரேமதாச தெரிவித்தார்.

அக்கரைப்பற்றில் நேற்று நடைபெற்ற "பிரபஞ்சம்" நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் ☞ 2

## மனித உரிமைகளுக்கான

# பின்லாந்து சிறப்புத் தூதருடன் கஜேந்திரகுமார் எம்.பி. சந்திப்பு

பின்லாந்து மனித உரிமைகளிற்கான சிறப்புத் தூதுவர் தீனா ஜோர்டிக்காவிற்கும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர்கஜேந்திரகுமார் பொன்னம்பலத்துக்குமிடையில் சிறப்புச் சந்திப்பு ஒன்று இடம்பெற்றுள்ளது.

அனைத்துலக இராஜதந்திர கட்டமைப்பின் ஒழுங்கமைப்பில் இச் சிறப்புச் சந்திப்பு நேற்று இடம்பெற்றது.

இச்சந்திப்பில், இலங்கை அரசினால் தமிழர் பிரதேசங்களில் நடத்தப்படும் திட்டமிட்ட மனித உரிமை மீறல்கள், சட்டவிரோத செயற்பாடுகள் தொடர்பாகக் காத்திரமான விடயங்கள் கலந்துரையாடப்பட்டன என்று ☞ 2

# உலகம் எப்படித்தான் மாறினாலும் சீனாவும் இலங்கையும் நண்பர்களே

## அந்த நாட்டு குடியரசு தினத்தில் தூதுவர் தெரிவிப்பு

உலகம் எப்படி மாறினாலும், சீனாவும் இலங்கையும் பரஸ்பர மரியாதை மற்றும் நம்பிக்கையுடன் நல்ல அண்டைநாடுகளாகவும், பரஸ்பர நன்மையுடன் நல்ல பங்காளிகளாகவும், ஒருவருக்கொருவர் உதவும் நல்ல நண்பர்களாகவும் உள்ளன என்று இலங்கைக்கான சீனத்தூதுவர் சி சென் ஹொங் தெரிவித்தார்.

மக்கள் சீனக் குடியரசின் 74ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டுஏற்பாடு ☞ 8

# நாடாளுமன்றில் தனித்துச் செயற்பட ஜனநாயகக் கூட்டணி நேற்று முடிவு

(ந.லோகதயாளன்.)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து பிரிந்து நாடாளுமன்றத்தில் தனித்துச் செயற்பட ஜனநாயகத் தமிழ்த் தேசியக்கூட்டணிநேற்று தீர்மானம் எடுத்துள்ளது.

ஜனநாயகத் தமிழ் தேசிய கூட்டணியின் கட்சித்தலைவர்களுக்கு இடையிலான கூட்டமொன்று அக் கூட்டணியில் அங்கம் வகிக்கும்ஈ.பி.ஆர்.எல்.எப் அமைப்பின் தலைவர் சுரேஸ்பிரேமச்சந்திரனின் இல்லத்தில் நேற்று மாலை நடைபெற்றது.

இக் கூட்டத்தில் தமிழீழவிடுதலை இயக்கம், தமிழீழ விடுதலைக் கழகம், தமிழ்த் தேசியக் கட்சி, ஜனநாயகப் போராளிகள் கட்சி, ஈபிஆர்எல்எப் உள்ளிட்ட கட்சிகளின் தலைவர்கள் கலந்துகொண்டிருந்தனர்.

இதுவரையில் தமிழ் அரசுக் கட்சியின் சின்னத்தில் போட்டியிட்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாகஅனைவரும் செயற்பட்டு வந்திருந்த நிலையில் கடந்த உள்ளூராட்சித் தேர்தலில் பிரிந்து நின்று தேர்தல்களைச் சந்திக்க இருந்தனர். ஆனாலும் நாடாளுமன்றத்தில் ☞ 2

# இந்தியா, சீனா, அமெ. நாடுகளின் நெருக்கடி பழகிப்போய்விட்டது

## ஜேர்மனியில் ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

இலங்கை போன்ற நாடுகள் அமெரிக்கா, இந்தியா, சீனா போன்ற நாடுகளிலிருந்து வரும் நெருக்கடிகளுக்கு முகம்கொடுக்க பழகியுள்ளதாகவும் அது புதியதொரு விடயமல்ல என்றும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

2024 ஆம் ஆண்டு உலகளாவிய சவால்களுக்குாடுகொடுக்கக் கூடிய வலுவான சர்வதேச திட்டமிடலுக்காக மேற்குலக நாடுகளும், ஐக்கிய அமெரிக்காவும், ஐரோப்பியசங்கமும் சீனாவுடன்தீர்மானமிக்க கலந்துரையாடல்களை மேற்கொள்ள வேண்டியதன் அவசியத்தையும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

அதேபோல் 'ஒரே மண்டலம் - ஒரே பாதை' என்ற சீனாவின் கூட்டு வேலைத்திட்டம் காரணமாக இலங்கை போன்ற நாடுகள் மீது ஏனையநாடுகள்சந்தேக கண்ணோட்டத்தை செலுத்தியுள்ளதாகவும், இதனால் தெற்காசிய பொருளாதார செயற்பாடுகளுக்கு தாக்கம் ஏற்படக்கூடும் என்றும் அவர் தெரிவித்தார்.

ஜேர்மனியின் பேர்லின் நகரில் நேற்றுநடைபெற்ற ☞ 8

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

சாதகமாக வராமல் விட்டால், அவர் நாடாளுமன்றப் பதவியிலிருந்து வெளியேற வேண்டிவரும். ஆனால் அந்த அச்சம் எல்லாம் அவருக்கு இருப்பதாகத் தெரியவில்லை.

தான் பதவியில் இருக்கும் வரைக்கும் இந்த நாட்டுக்கும் மக்களுக்கும் "சேவையை" ஆற்றியே தீருவது என்பதில் மிக உறுதியாக இருக்கிறார். அவரது யோசனைதான் கஞ்சாபயிர்ச் செய்கையை இலங்கையில் சட்டபூர்வமாக்குவது. நாட்டில் டொலர் இல்லை என்று அழுது புலம்புவதை விட்டு, கஞ்சாவைப் பயிர் செய்து அதை ஏற்றுமதி செய்து டொலரைச் சம்பாதிக்கலாம் என்பது அம்மணியின் யோசனைதான். கடந்த சில வருடங்களாகவே இதற்காகப் போராடி ஒருவழியாக இப்போது அந்தத் திட்டத்திற்கு அமைச்சரவையின் அங்கீகாரத்தையும் அம்மணி பெற்றுவிட்டார்.

கஞ்சாவைப் பயன்படுத்தியார் எக்கேடு கெட்டால் எமக்கென்ன, டொலரைச் சம்பாதித்து நாம் நன்றாக இருந்தால் போதும் என்கிற "நல்ல எண்ணம்" அம்மணிக்கு. சர்வதேச நாணய நிதியமும் தனது இரண்டாம் கட்டக் கடனை எப்போது கொடுக்கும்? கொடுக்குமாவிடுமா? என்றே தெரியாமல் திணறும் இந்த ஆட்சியும் ஒருவழியாக கஞ்சா மயக்கத்திற்குள் விழுந்துவிட்டது.

கஞ்சா கடத்தல் மற்றும் விற்பனையால் நாடு படும் பாட்டுக்குள் அம்மணியின் கஞ்சா யோசனையால் இனி இந்த நாடு என்னவாகுமோ என்று அஞ்சி நடுங்கி இருக்கும்போதே அம்மணி அடுத்த குண்டையும் தூக்கிப் போட்டுவிட்டார். அம்மணியின் புதிய கோரிக்கை என்னவென்றால் கசிப்பைச் சட்டபூர்வமாக்கி விற்பனைக்குவிடவேண்டும் என்பதுதான்.

அரசு வரியை ஏற்று ஏற்று என்று ஏற்றியதில் வெளிநாட்டுமதுபானங்களின் விலைகள் எக்கச்சக்கமாக அதிகரித்துவிட்டதால் அவற்றுக்குமாற்றாககசிப்பைச் சட்டபூர்வமாக்கவேண்டும் என்கிறார் அம்மணி.

இலங்கைக்கு வரும் சுற்றுலாப் பயணிகளை அதிகம் செலவழிக்க வைக்க இதுவொரு சிறந்த வழி என்பது அம்மணியின் கருத்து. அதாவது காசுகூடுதல் என்பதற்காக வெளிநாட்டு மதுபானங்களைச் சுற்றுலாவிகள் குடிக்காமல் தவிர்ப்பதிலும் பார்க்க, குறைந்தவிலையில்கசிப்பை அவர்களுக்கு விற்கலாம் என்பதே அவரது யோசனை. சுற்றுலாவிகளைஒரேயடியாக அனுப்பி விடலாம் என்று பார்க்கிறாரோ என்னவோ.

ரஷ்யாவின் வோட்கா மற்றும் சீனாவின் ஜப்பானின் ஷேக் போன்ற மதுபானங்களுக்கு நிகராக கசிப்பையும் உலகப் புகழ் பெறவைத்துவிடலாம்என்பது அவரது திட்டம். வெளிநாட்டுச் சரக்கின் விலை அதிகரிப்புக் காரணமாக ஏற்கனவே கசிப்பு உற்பத்தி 500 மடங்கு அதிகரித்து விட்டது என்று கூறும் அவர், இந்த நிலையில் ஏன் அதனைச் சட்டபூர்வமாக்கி அரசும் இலாபம் சம்பாதிக்கக்கூடாது என்று கேட்கிறார்.

கசிப்பை உரிய தரநிர்ணயங்களுக்கு உட்படுத்தினால், அதனை ஏற்றுமதி செய்து அதன் மூலமும் டொலரை அள்ளிக் குவிக்கலாம் என்றும் அவர் யோசனை தெரிவித்திருக்கிறார்.

''எங்கையிருந்துடா அள்ளிட்டு வந்தீங்க இந்தத் தங்கத்தை....?"

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## அதனால்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அனைத்துப் பதவிகளில் இருந்தும்தான்விலகுகின்றார் என்று அறிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டம் குருந்தூர்மலையில், தொல்லியல் இடத்தில் கட்டப்பட்டுவரும்விகாரைக்கு எதிராகத்தாக்கல்செய்யப்பட்ட வழக்கை இவரே விசாரித்து வந்தார். அங்கு விகாரைக் கட்டுமானங்களை இடை நிறுத்துமாறு கட்டளையும் பிறப்பித்திருந்தார். அதனை மீறியும் அங்கு விகாரை கட்டப்பட்டது. இது குறித்த முறைப்பாட்டின் மீது நடத்தப்பட்ட விசாரணைகளில் நீதிமன்ற உத்தரவுமீறப்பட்டமைஉறுதியாகியதாக அண்மையில் தீர்ப்பிடப்பட்டிருந்தது.

இந்த விசாரணைக்காக குருந்தூர்மலைக்கு நீதிபதி சென்றிருந்தபோது, அங்கு வந்திருந்த நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர, பின்னர் நாடாளுமன்றத்தில்

## நாணய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாணய நிதியம் பாராட்டு தெரிவித்துள்ளதாகவும் கூறினார்.

ஜனாதிபதி ஊடகமையத்தில் நேற்று செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

நிதி அமைச்சு மற்றும் மத்திய வங்கியின் பங்கேற்புடன் அண்மையில் சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சு இடம்பெற்றன. அதனைத் தொடர்ந்து ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுடனும் பிரதிநிகள் குழு நீண்ட கலந்துரையாடலில் ஈடுபட்டது.

இதுவரையில் மேற்கொள்ளப்பட்டிருக்கும் கடன் மறுசீரமைப்புச் செயற்பாடுகள் மற்றும் நீடிப்பு செயற்பாடுகளுக்குப் பாராட்டு தெரிவித்த சர்வதேச நாணய நிதியக் குழுவினர், அந்த செயற்பாடுகளை முன்னெடுக்கும்போது மக்கள் வழங்கிய ஒத்துழைப்புக்கும் பாராட்டு தெரிவித்தனர்.

குறிப்பாக சர்வதேச நாணய நிதியத்துடனான செயற்குழு மட்டத்திலான இணக்கப்பாட்டினை விரைவில் எட்ட முடியும் என்ற நம்பிக்கை எமது ஆட்சிக்கு உள்ளது. அதற்காக வரிசேகரிப்புசெயற்பாடுகளில் மேற்கொள்ளப்படவேண்டிய சீர்திருத்தங்கள் மற்றும் வரி செலுத்தாமல் இருப்போரை கண்டறிவதற்கானவேலைத் திட்டம் என்பன குறித்தும் ஐ.எம்.எப் குழுவினர் ஆலோசனைகளை வழங்கியிருந்தனர்.

மேற்படி வேலைத் திட்டத்தின் கீழ் இன்னும் பல செயன்முறைகளை முன்னெடுக்க வேண்டியுள்ளன. ஆனால் இந்த பேச்சுக்கள் தொடர்பிலான தவறான எண்ணங்களை பரப்ப சிலர் முயற்சித்து வருகின்றனர்.

இலங்கையின்உள்நாட்டு கடன் மறுசீரமைப்புச் செயற்பாடுகள் முழுமையாக நிறைவடைந்துள்ள நிலையில், வெளிநாட்டு கடன் மறுசீரமைப்புச் செயற்பாடுகளில் இலங்கைக்கு ஒத்துழைப்புவழங்குவதற்காக இந்தியா மற்றும் ஜப்பான் உள்ளிட்ட நாடுகள் இணைத்தலைமைத்துவம் வகிக்கும் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

கடன் மறுசீரமைப்பு செயற்பாடுகளில்இலங்கைக்கு சில நாடுகள் ஒத்துழைப்பு வழங்கவில்லை என்று போலியான விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டாலும், இலங்கைக்குகடன்வழங்கிய நாடுகள் பலவும் வெளிநாட்டு கடன் மறுசீரமைப்புச் செயற்பாடுகளின் முன்னேற்றகரமான பேச்சுக்களில் தொடர்ச்சியாகப் பங்களிப்புச் செய்து வருகின்றன.

மறுமுனையில், நாட்டின் பணவீக்கம் 1.3 ஆக குறைவடைந்துள்ளமை மற்றும் கையிருப்பு அதிகரித்துள்ளமை, வெளிநாடுகளில் வசிக்கும் இலங்கையர்களின் பணம் அனுப்பும் செயற்பாடுகள் சுமூகமான நிலைக்குத் திரும்பியுள்ளமை, நாட்டின் அடிப்படைக் கணக்கின் வைப்புத் தொகை அதிகரித்துள்ளமை என்பன மகிழ்ச்சிக்குரியன. அரசின் வருமானம் 48 சதவீதமாக அதிகரித்துள்ள நிலையில், செலவீனமும் 38 சதவீதமாக அதிகரித்துள்ளது.

கடன் மறுசீரமைப்புச் செயற்பாடுகள் இடம்பெற்று வரும் காலப்பகுதியில் கடன் செலுத்துவதற்கு தவணைகளைச் செலுத்துவதற்கு மாறாக பெருமளவில் வட்டிப் பணத்தை செலுத்த நேர்ந்துள்ளமையே அரச செலவீனங்கள் அதிகரிக்க காரணமாகியுள்ளன.

எவ்வாறாயினும், பொருளாதார மறுசீரமைப்புக்களின் பயனாக எதிர்வரும்பண்டிகை காலப்பகுதியில் நாட்டின் பொருளாதாரம் வலுவான நிலைமையை அடையும் என்றும் நம்பிக்கை உள்ளது.

தற்போது முன்னெடுக்கப்பட்டுவரும்பொருளாதார மறுசீரமைப்புக்களை 20 வருடங்களுக்கு முன்பாகச் செய்திருக்கும் பட்சத்தில் நாடு வலுவான நிலைமை அடைந்திருக்கும். அதன்படி அபிவிருத்திஅடைந்தநாடுகள் பின்பற்றிய அனைத்து படிமுறைகளையும் எமது ஆட்சி பின்பற்றி வருகின்றது.

இவ்வாறான நிலைமைகளுக்கு மத்தியில் இந்நாட்டில் பொருளாதார முன்னேற்றம் ஏற்பட்டால், அதனால் தமது அரசியல் செயற்பாடுகளுக்கு பாதிப்பு ஏற்படக்கூடும்எனகருதுகின்ற சிலர்தவறானகருத்துக்களை பரப்ப முற்படுகின்றனர். ஆனால், சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாம் தவணை கடன் இலங்கைக்கு கிடைக்காது என எவரும் குறிப்பிடவில்லை.

மறுமுனையில் பொருளாதாரத்திற்கான இயற்கை வளங்கள் அற்ற நாடுகளின் வரி அறவீட்டு குறிகாட்டியில் இலங்கைமிககுறைந்தளவில் வரி அறவிடும் நாடாக பெயரிடப்பட்டுள்ளதால், வரி அறவீட்டுக்கான மென்பொருளை புதுப்பித்து வரி சேகரிப்பு பணிகளை சீரான முறையில் முன்னெடுக்க எமது ஆட்சி எதிர்பார்த்துள்ளது.

எவ்வாறாயினும் இலங்கையில் மீண்டும் ஒரு பெரும் பொருளாதார நெருக்கடி ஏற்படாது என்ற உறுப்பாட்டினையை சர்வதேச நாணய நிதியம் எதிர்பார்க்கின்றது.

அத்தோடு, அடுத்தவருடம் பெப்ரவரி மாதத்திற்குமுன்பாக நாட்டின்பல்வேறுபொருட்கள் மீது விதிக்கப்பட்டுள்ள இறக்குமதித் தடை நீக்கப்படும். அதேநேரம் பொதுப்போக்குவர்துக்கான வாகனங்கள் மீதான இறக்குமதி கட்டுப்பாடு அவசியம். மற்றைய வாகனங்கள் மீதான இறக்குமதித்தடையைநீக்கும் எண்ணம் தற்போதைக்கு இல்லை - என்றார்.

## கடன்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெற்றுக்கொண்டார். அதனையடுத்து, பாராளுமன்றஉறுப்பினர்கோகிலா குணவர்த்தனவின் தீக்கிரையான வீட்டினையும் பார்வையிட்டார்.

தொடாந்து செய்தியாளர்களின்கேள்விகளுக்கும் பலிலளித்தார்.

கேள்வி:- பொது ஜன பெரமுனவின் தலைமைத்துவம் மாறுகின்றதா?

பதில்:- அவ்வாறு மாற்றப்படவேண்டிய அவசியமில்லை. அதுபற்றி நான் அறியவுமில்லை. இருப்பினும் ஒவ்வொருவருக்கும் வெவ்வேறு கருத்துக்கள் காணப்படலாம் அல்லவா?

கேள்வி:- சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாவது கடன் தொகை கிடைப்பதில் காலதாமதம் ஏற்பட்டுள்ளதல்லவா?

பதில்:- எமது காலத்தில் எவ்விதமானபிரச்சினைகளும் காணப்படவில்லை. ஆகவே கடன்களை பெறுவதற்குச் சென்றவர்கள் சரியான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்.

கேள்வி:- உள்நாட்டு வரிகளைஅறவிடுவதுதொடர்பில்சர்வதேசநாணயநிதியம் குறைகூறியுள்ளதல்லவா?

பதில்:- சர்வதேசநாணய நிதியத்திடம் கடன் பெறச் சென்றவர்கள் அதனைச் சரியாகச் செயற்படுத்த வேண்டும். எமது காலத்தில் இவ்வாறான பிரச்சினைகள் காணப்படவில்லை. நாம் அவர்களுக்காக அந்தச் செயற்பாட்டை முன்னெடுக்க முடியாதல்லவா?

கேள்வி:- சமூக ஊடகங்களை கட்டுப்படுத்துவதற்கு புதிய சட்டம் கொண்டுவரப்படவுள்ளமை பற்றி உங்களின் நிலைப்பாடு என்ன?

பதில்:-சமூகஊடகங்களில் நல்லவிடயங்களும்உள்ளன. தவறான விடயங்களும் உள்ளன. மக்களின் உரிமைகளுக்கு மதிப்பளிக்க வேண்டும். எனக்கு அதனால் எவ்விதமான பிரச்சினைகளும் இல்லை

## ஜனநாயகக்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் மற்றும் பேச்சாளர் சுரேஸ் பிறேமச்சந்திரன் ஆகியோர் தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவர் சி.வி.விக்னேஸ்வரனை இன்று சந்திக்கின்றனர்.

இதற்கமைய இந்தியப் பிரதமருக்கான கடிதத்தை எழுதி அதனை நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன் அனுப்பும் அதே நேரம் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியினர் கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகத்தில் அந்தக் கடிதத்தைச் சந்திப்பிற்கான முன்னெடுப்பை மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளனர்.

இதேநேரம் குறத்த விடயம் தொடர்பில் ஏனைய கட்சிகளுடனும் தொடர்ந்து பேசவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## நீதிபதியின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவதூறுக்கு உள்ளாக்கியிருந்தார்.

அதன்பின்னர் குருந்தூர் மலையில் தமிழர்கள் வழிபாடியற்றுவதற்கு, சட்டவரன்முறைகளுக்கு உட்பட்டு நியாயபூர்வமாக வழங்கப்பட்ட தீர்ப்பினை மாற்றம் செய்யுமாறு சட்டமா அதிபர் மட்டத்தில் கொடுக்கப்பட்ட அழுத்தம் மற்றும் தொடர்ச்சியான அச்சுறுத்தல்கள் காரணமாக முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி பதவி விலகியுள்ளார் என்று தெரிகிறது.

இது இந்த நாட்டின் நீதித்துறைக்கும், ஜனநாயகத்துக்கும் விழுந்திருக்கிற சாட்டையடி மட்டுமல்ல, இதை மிகமோசமான இனவாதச் செயலாகவே கருதவேண்டியுள்ளது. இதற்கு, எனது வன்மையான கண்டனங்களைத் தெரிவிக்கிறேன்.

2000 நடுப்பகுதியில் யாழ்ப்பாண மாவட்ட நீதிபதியாக இருந்த திருமதி.சிறிநிதி நந்தசேகரன் அவர்கள் மீது, இராணுவத்தினால் மேற்கொள்ளப்பட்ட கொலை முயற்சியை அடியொற்றி, மீளவும்வடக்கின்தமிழ்நீதிபதி ஒருவர் மீது பகிரங்கமாக மேற்கொள்ளப்பட்டுள்ள இத்தகையதொரு உயிர் அச்சுறுத்தல், இலங்கையின் நீதித்துறையின் இயங்குநிலையும் மெல்லமெல்ல இராணுவமயப்படுத்தப்படுவதற்கான எத்தனமாகவே தென்படுகிறது.

நீதித்துறையே அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்படும் இந்த நாட்டில், இன, மத ஆக்கிரமிப்புகளும், அடக்குமுறைகளும் எத்தனை வீரியமாய் இருக்கும் என்பதுபற்றி, சர்வதேசசமூகம் இனியேனும்கூருணர்வோடு செயலாற்ற வேண்டும் என்றும், இத்தகையதொரு நிலை, இன்னுமோர் தமிழ் நீதிபதிக்கு

ஏற்படாதிருக்க வழிவகை செய்யவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன் - என்றுள்ளார்.

## 13இனை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தியா கரிசனை கொள்ள வேண்டுமென்றும் கோரியுள்ளார்.

13 ஆவது திருத்த அமுலாக்கம் தொடர்பில் யாழ்ப்பாணத்திலுள்ள தமது கட்சி அலுவலகத்தில் நடத்திய கலந்துரையாடலின் பின்னர் செய்தியாளர்களிடம் அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

பதின்மூன்றாவதுதிருத்தச் சட்ட அமுலாக்கம் தொடர்பாக ஜனாதிபதியுடன் இடம்பெற்ற கூட்டத்தில் கலந்து கொண்ட பலரும் இன்று என்னையும் சந்தித்துக்கலந்துரையாடினர்.

குறிப்பாக 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்துகின்றபோது அந்தச் சட்டத்திலிருந்துபறிக்கப்பட்ட அதிகாரங்களை திரும்பப் பெறவேண்டியது மிகவும் அவசியம்.

இதனடிப்படையில் பறிக்கப்பட்டஅதிகாரங்களைத் தொடர்ந்தும் எப்படி மீள எடுப்பதுஎன்பதுசம்பந்தமான நடவடிக்கைகளில் நாங் கள் ஈடுபட்டுள்ளோம். அதற்கமைய இன்றும் நாங்கள் பேசி இருக்கின்றோம்.

கடந்த செப்டம்பர் மாதம் முதலாம் திகதி இது சம்பந்தமாக விசாரணை செய்வதற்கான அந்தக் குழுவை வர்த்தமானி மூலமாக பிரசுரிப்பதாகச் சொல்லப்பட்டது. எனினும் அது வெளிவராத நிலையில் ஒக்டோபர் மாதம் முதலாம் தேதிக்கு என்று பின்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

இதற்கிடையில்ஜனாதிபதி வெளிநாடுகளுக்கு சென்றுவிட்டார். இதனால்எங்களுக்கு தாமதம் ஏற்படுவதனால் இது சம்பந்தமான நிபுணர் குழுவின் ஊடாகஎவ்வாறான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என ஆராய்ந்திருக்கிறோம்.

இந்தவிடயத்தில்இனியும் தாமதம்ஏற்படக்கூடாதுஎன்ற காரணத்திற்காக நாங்கள் இது சம்பந்தமாக என்ன மாதிரியான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று பேசினோம்.

முக்கியமாக 13ஆவது சட்டத்தில் இருந்து பறிபோன அதிகாரங்களைத் திரும்பப் பெறவேண்டிய அவசியம் எங்களுக்கு இருக்கிறது. அதனை இந்தியாவும் கருத்தில் எடுத்துக் கொண்டு இருக்கிறபடியால் இது சம்பந்தமாக இந்தியாவும் தன்னுடைய கருத்தை தெரிவிக்கவேண்டும் என்ற ஒரு எண்ணம் எங்களுக்கு இருக்கின்றது.

ஆனால் ஜனாதிபதியினுடைய எண்ணங்கள் எவ்வாறு இருக்கின்றது என்பது பற்றி எங்களுக்கு தெரியவில்லை. ஆயினும் அவருக்கு பதிலாக இங்கு இருக்கும் மற்றைய அலுவலர்கள் அல்லது அரசியல்வாதிகள் அதற்குரிய நடவடிக்கைகளை எடுக்கக் கூடும் என்ற எண்ணமும் இருக்கிறது.

இந்த 13 ஆம் திருத்த சட்டத்தை அமுல்படுத்தி மாகாண சபைகளை உருவாக்க வேண்டிய அவசியம் எப்பொழுதையும் பார்க்க இப்போது மிக மிக அதிகமாகியிருக்கிறது.

குறிப்பாக தமிழ் மக்களினுடைய சகல அதிகாரங்களும் குறைந்து வருகின்றது. ஆட்சியாளர்களின் அனுசரணையோடு தமிழ் மக்களுக்கு எதிரான அல்லது ஏற்றுக்கொள்ள முடியாத பல விதமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

குறிப்பாக தமிழ் மக்களின் காணிகள் அபகரிப்பு, அதிகாரங்களின் அபகரிப்பு என்பன தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டுதான் இருக்கின்றன. ஆகவே இவற்றை நாங்கள் தடுத்து நிறுத்தி தமிழ் மக்களுடைய அதிகாரங்களை பலப்படுத்துவதற்கு முதற்கட்டமாக மாகாண சபைகள் அமைக்கப் பெறுவது அவசியம்.

அதற்குரிய நடவடிக்கைகளை எவ்வாறு எடுக்கவேண்டும் என்பது சம்பந்தமாக நாங்கள் ஆராய்ந்துள்ளோம். இன்றைய தினம் இவை பற்றி பலவிதமான கோணங்களில் நாங்கள் பேசியும் இருக்கின்றோம்.

விசேசமாகஅரசமைப்பில் எந்தெந்த உறுப்புரைகளின் அடிப்படையிலேயேஇவற்றை நாங்கள் முன்னெடுக்க வேண்டும்என்பதுதொடர்பில், முக்கியமாக154ரிஇனுடைய ஏற்பாடுகளை நாங்கள் பரீட்சித்து பார்த்தோம்.

இதில் முக்கியமாக யாழ் பல்கலைக்கழக சட்டத்துறை தலைவியான கோசலை மதனும் வந்திருந்து இது சம்பந்தமாகத் தன்னுடைய கருத்துக்களைத் தெரிவித்திருந்தார்.

ஆகவே 13ஆவது திருத்தச் சட்ட அமுலாக்கம் சம்பந்தமாகஎடுக்கவேண்டிய நடவடிக்கைகள் பற்றியும் அந்தத் திருத்ததிலிருந்து பறிக்கப்பட்ட அதிகாரங்களை மீள பெறுவதற்கு நாங்கள் என்னென்ன செய்ய வேண்டும் என்பது பற்றியும் இதற்கு ஆளுந்தரப்பின் அனுசரணையைப் பெறுவது எப்படி என்பது பற்றியும் இது விடயத்தில் இந்தியாவினுடைய கரிசனையைப் பெறவேண்டும் என்பது தொடர்பாகவும் நாங்கள்பேசிக்கொண்டோம் - என்றார்.

## பின்லாந்து.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவிக்கப்பட்டது. தமிழர் தாயகத்தில் நடைபெறும் மனிதவுரிமை சார்ந்த விடயங்களை ஐரோப்பிய

தொடர்ச்சி 8 ம் பக்கம்...

காலைக்கதிர் Kalaikkathir

# ஆளுநரின் உத்தரவையும் மீறி விகாரைக் கட்டுமானப் பணி

## திருகோணமலையில் மீண்டும் சர்ச்சை

திருகோணமலை இலுப்பைக் குளத்தில் தடையுத்தரவு பிறப்பிக்கப் பட்டுள்ள சர்ச்சைக்குரிய பகுதியில் இரகசியமான முறையில் கட்டுமா னப்பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன என அப்பகுதி மக்கள் கவலை வெளியிடுகின்றனர்.

திருகோணமலை இலுப்பைக் குளம் கிராம சேவகர் பிரிவுக்குட்பட்ட பொரலுகந்த ரஜமகா விகாரை எனும் பெயர்ப்பலகை நடப்பட்டுள்ள பகுதியில் இரகசியமான முறையில் இரவு வேளைகளில் கட்டுமானப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என மக்கள் தெரிவிக்கின்றனர்.



திங்கட்கிழமைஇரவுசிலகட்டு மானப் பணிகள் மேற்கொள் ளப்பட் டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது. குறித்த பகுதியில் விகாரையின் கட்டுமானப் பணிகளுக்கு கிழக்கு மாகாண ஆளுநரால் தடை விதித்து தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில், அப்பகுதியில் இரகசியமாக முறையில் கட்டுமானப்பணிகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன என மக்கள் அதிருப்தி வெளியிடுகின்றனர்.

குறித்தபகுதியில்விகாரையின் கட்டுமானங்களுக்கு எதிர்ப்பு தெரிவித்து இம்மாதம் 3 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மக்கள்எதிர்ப்புஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். இதன்பின்னர் 09 ஆம் திகதி காலை மக்களின் எதிர்ப்புக்கு மத்தியில் குறித்த பகுதியில் பொரலுகந்த ரஜமகா விகாரை எனும் பெயர் பொறிக்கப்பட்ட பெயர்ப்பலகை நடப்பட்டிருந்தது.

சிங்கள மக்களின் குடியிருப்பு இல்லாத பகுதியில் குறித்த விகாரை அமைக்கப்படுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன எனவும், இந்தச் செயற்பாடானது இனங்களுக்கிடையே முறுகல் நிலையை ஏற்படுத்தும் எனவும் அப்பகுதி மக்கள் தெரிவித்து வருகின்றனர்.

அத்துடன், குறித்த விகாரைக்கான பணிகளை இடைநிறுத்தக்கோரி ஆளுநரால் தடை விதிக்கப்பட்டுள்ள நிலையில் இச்செயற்பாடு மேற்கொள்ளப்பட்டுவருவதாகவும்மக்கள்கவலை வெளியிடுகின்றனர். (05)

## கசிப்பு விற்பனையில் பாடசாலை மாணவன்

### கலவானா பகுதியில் சம்பவம்

இரத்தினபுரி மாவட்டத்தில்கலவானா பிரதேசத்திலுள்ள பாட சாலை ஒன்றில் மாணவனொருவன் சக மாணவர்களுக்கு கசிப்பு விற்பனை செய்தார் என்று பொலிஸாரிடம் முறையிடப்பட்டுள்ளது.

மாணவன் கசிப்பு விற்பதை அவதானித்த பாடசாலை ஆசிரியர் அந்த மாணவனை பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளார்.

குறித்த பாடசாலையில் 9 ஆம் வகுப்பில் கல்வி கற்கும் மாணவனே இவ்வாறு கசிப்பு விற்பனைசெய்துள்ளார்.

குறித்த மாணவன் தண்ணீர் போத்தலில் கசிப்பைக் கொண்டு சென்று உயர்தர மாணவர்களுக்கு கோப்பைகளில் ஊற்றி விற்பனைசெய்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நிலையில், பொலிஸார் மாணவனைக் கடுமையாக எச்சரித்து விடுவித்துள்ளார்கள். (05)

## இணையத்தில் ஆபாச காணொளி பகிர்ந்து காசு பார்த்த பெண் கைது

ஆபாச காணொளிகளை பணம் சம்பாதிக்கும் நோக்குடன் இணையத்தில் பகிர்ந்த பெண்ணொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

தனது ஆபாச காணொளிகளையே பணம் சம்பாதிக்கும் நோக்குடன் இணையத்தில் பகிர்ந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பெண்ணை கைதுசெய்த குற்றப்புலனாய்வுப் பிரிவின் கணனி குற்றப்பிரிவினர் கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தியுள்ளனர்.

குறித்த பெண் தனது கணவரின் துணையுடன் ஒரு நிமிட ஆபாச காணொளிக்கு ஆயிரம் ரூபா வீதம் என தனது வங்கிக் கணக்கில் பண வைப்பு செய்த நபர்களுக்கு காணொளிகளை இணையத்தில் பகிர்ந்துள்ளதாக கணினி குற்றப் பிரிவின் அதிகாரிகள் தெரிவித்தனர்.

நீதிமன்றில் குறித்த பெண்ணை ஆஜர்படுத்திய நிலையில், அவரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (05)

## மூன்று குற்றச் சம்பவங்களில் மட்டக்களப்பில் 4 பேர் கைது!

மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் பிரிவிலுள்ள பிரதேசத்தில் 3 வெவ்வேறு சம்பவங்களில் 4 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

ஜயந்திபுர பிரதேசத்தில் குடும்பத்தகராறுகாரணமாகதனது சகோதரியை அவரின் வீடு தேடிச் சென்று கூரிய ஆயுதத்தால் தாக்க முற்பட்டபோது அதைத் தடுக்க முற்பட்ட தாயரின் மீது கூரிய ஆயுதத்தால் தாக்கிய மகனை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அதேவேளை, புதூர் பிரதேசத்தில் கசிப்பு வியாபாரத்தில் ஈடுபட்ட ஒருவரைக் கைது செய்ததுடன், அந்த பகுதியில் சந்தேகத்துக்கு இடமாக நடமாடிய 25 வயதுடைய இளைஞனையும் பொலிஸாஜர்கைதுசெய்துள்ளனர்.

இதனைத் தொடர்ந்து, வீதிபோக்குவரத்து சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த பொலிஸார் வீதியால் மோட்டார் சைக்கிளில் பிரயாணித்த ஒருவரை நிறுத்தி சோதனையிட்ட போது அவர் மதுபோதையில்இருப்பதைக்கண்டு அவரைக் கைது செய்துள்ளனர்.

இந்த வெள;வேறு 3 சம்பவங்களில் கைது செய்யப்பட்ட 4 பேரையும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைமட்டுதலைமையக பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

## தமிழகக் கடல் தொழிலாளர்களின் அத்துமீறல்களை கட்டுப்படுத்த முடியவில்லை என டக்ளஸ் கைவிரிப்பு

தமிழகக்கடற்தொழிலாளர்களின் அத்துமீறல்களை கட்டுப்படுத்த கடந்த 20 வருட காலமாக தாம் முயற்சித்து வருகின்ற போதிலும் அதனை முழுமையாகக் கட்டுப்படுத்த முடியவில்லை என கடற்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் புதன்கிழமை மாவட்ட செயலகத்தில் கடற்தொழில் அமைச்சரின்தலைமையில்நடைபெற்றது.

அதன் போதே அமைச்சர் அவ்வாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில் -

இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழையும் தமிழக கடற்தொழிலாளர்களைக் கட்டுப்படுத்தும், செயற்பாட்டை கடற்படையினர் தொடர்ச்சியாக முன்னெடுத்து வருகின்ற போதிலும், அவர்களைக் கைது செய்யும் செயற்பாட்டில் கடற்படையினர் தயக்கம் காட்டுகின்றனர்.

கடற்தொழிலாளர்களின் அத்துமீறல்களைக் கட்டுப்படுத்த, கடந்த 20 வருட காலமாக நான் முயற்சித்து வருகின்றேன். இந்த அத்துமீறலைக் கட்டுப்படுத்துவதற்காக பல பேச்சுகளிலும் நான் கலந்து கொண்டேன். ஆனால் அந்த பேச்சுகளில் எந்த சாதகமான முடிவும் எட்டப்படவில்லை.

தற்போது ஒரு தீர்மானத்துக்கு வந்திருக்கின்றேன். நாடாளுமன்ற தமிழ்உறுப்பினர்களுடன், இந்தியா சென்று இந்த விடயம் தொடர்பில் கலந்துரையாடி ஓர் உண்மையானநிலைமையைஅவர்களுக்கு புரிய வைக்க வேண்டும் என, அதற்கு நாடாளுமன்ற தமிழ் உறுப்பினர்கள்ஒத்துழைப்பார்கள் எனக் நம்புகின்றேன்.



அதன் மூலம் இதற்கு ஒரு சாதகமான முடிவை எடுக்க முடியும். எல்லை தாண்டும் பிரச்சினை. இலங்கையில் மாத்திரமல்ல இது ஏனைய உலக நாடுகளிலும் காணப்படுகின்றது. இரு நாடுகளின் பிரச்சினை இரு நாடுகளுனான பேச்சு மூலம் தீர்க்க முடியும் என மேலும் தெரிவித்தார். (05)

## பீடி இலைகளுடன் இரண்டு பேர் கைது

இந்தியாவிலிருந்து சட்டவிரோதமாக கடல்மார்க்கமாக பீடி இலைகள் கொண்டுவரப்பட்டு வென்னப்புவ பகுதிக்கு கடத்த முற்பட்ட இருவர் புத்தளம் தழுவ பகுதியில் தம்பபண்ணி கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தம்பபண்ணி கடற்படையினருக்குக்கிடைக்கெப்பெற்ற இரகசியத் தகவலுக்கமைய புத்தளம் தழுவ கஜுவத்த கடற்கரைப் பகுதியில் பீடி இலைகளை வாகனங்களில் ஏற்றிக்கொண்டிருந்த வேளை சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்போது, 40 உரைப் பைகளில் சுமார் 1,236 கிலோ கிராம் 500 கிராம் பீடி இலைகள் கைப்பற்றப்பட்டுள்ளன. அத்துடன், பீடி இலைகளைக் கடத்துவதற்குப் பயன்படுத்தப்பட்ட கெப் ரக வாகனம், லொறி மற்றும் 3 மோட்டார் சைக்கிள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இவ்வாறு கைப்பற்றப்பட்ட பீடி இலைகள் சுமார் 85 லட்சம் ரூபாவிற்கும் அதிக பெறுமதியென கடற்படையினர் தெரிவித்தனர். அத்துடன் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் இருவரும் கற்பிட்டி பகுதியைச் சேர்ந்த 24 வயதுடையவர்களென கடற்படையினர் தெரிவித்தனர்.

இவ்வாறு கைப்பற்றப்பட்ட பீடி இலைகள் இந்தியாவிலிருந்து சட்டவிரோதமாக கடல்மார்க்கமாக கொண்டுவரப்பட்டதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

கைப்பற்றப்பட்ட பீடி இலைகள் கடத்தலுக்குப் பயன்படுத்தப்பட்ட கெப் வாகனம், லொறி மற்றும் மோட்டார் சைக்கிள்கள் மதுரங்குளிபொலிஸ்நிலையத்தில் ஆஜர்படுத்தப்பட்டுள்ளன என தம்பபண்ணி கடற்படையினர் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களிடமிருந்து தொடர்ந்தும் விசாரணைகளை முன்னெடுத்து வருவதுடன் புத்தளம் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்க உள்ளதாகமதுரங்குளிபொலிஸார் தெரிவித்தனர்.

(05)

## கர்ப்பப் பையை அகற்றியதை எதிர்த்து கிளிநொச்சிப் பொலிஸில் முறைப்பாடு

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் மனைவியின் கருப்பையை அகற்றிய விடயம் தொடர்பில் கணவன் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

கடந்த 26.06.2023 குழந்தை பிரசவத்திற்காக கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட தனது மனைவிக்கு 27.06.2023 அன்று சத்திர சிகிச்சை மூலம் இறந்த நிலையில் குழந்தை எடுக்கப்பட்டதோடு, தனது மனைவியின் கருப்பையும் அகற்றப்பட்டுள்ளது.

இது மருத்துவ தவறுகளின் காரணமாக இடம்பெற்றது எனத் தெரிவித்து இராசதுரை சுரேஸ் என்பவர் தர்மபுரம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றை பதிவு செய்துள்ளார்.

தனது குழந்தை வயிற்றுக்குள்ளே இறப்பதற்கும், தனது மனைவியின் கருப்பை அகற்றப்படுவதற்கும் மருத்துவர்களின் தவறே காரணம் எனவும் தனது வாழ்க்கையில் இனி குழந்தை பாக்கியமே இல்லாத நிலைமைக்கு தனது குடும்பத்தை தள்ளிவிட்டார்கள் என்றும் தெரிவித்து பாதிக்கப்பட்ட பெண்ணின் கணவன் மேற்படிமுறைப்பாட்டைபதிவுசெய்துள்ளார். (05)

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## சிறுவர் தினத்தில் சந்திப்போம்

குழந்தைகள் தினம் முதன்முதலில் 1954 இல் உலக குழந்தைகள் தினமாக நிறுவப்பட்டது. 1959 ஐநா பொதுச் சபை குழந்தைகளின் உரிமைப் பிரகடனத்தை ஏற்றுக்கொண்ட ஆண்டு. 1989 ஐநா பொதுச் சபை குழந்தைகளின் உரிமைகள் தொடர்பான மாநாட்டை ஏற்றுக்கொண்டது.

நம் நாட்டில் – இலங்கையில் – குழந்தைகள் தினம் ஒவ்வொரு ஆண்டும் ஐப்பசி 1 அன்று கடைப்பிடிக்கப்படுகிறது. சுதந்திரத்திற்குப் பிறகு, குழந்தைத் தொழிலாளர்களைப் பயன்படுத்துவதைத் தடுக்கும் சட்டங்கள் உட்பட குழந்தைகளைப் பாதுகாக்கும் பல சட்டங்கள் நம்மிடம் உள்ளன.

நமது தொடக்க நிலை சுகாதார சேவைகள் குழந்தை இறப்பு விகிதத்தை வெகுவாகக் குறைத்துள்ளதையும் பெருமையுடன் சுட்டிக்காட்டலாம். ஆனால் இப்போது நிலமை அப்படியாக இருக்கின்றது.

துரதிஷ்டவசமாக இன்று நாடு பொருளாதாரத்தில் மோசமான நிலையில் உள்ளது.

கொவிட்–19 பெருந்தொற்று நிலமை வேலை வாய்ப்புகளை மூடுவதற்கு வழிவகுத்தது. இதனால் பலர் வேலை இழந்துள்ளனர். சாதாரண தொழிலாளர்கள் மிகவும் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளனர் – பெற்றோர்களால் தங்கள் குழந்தைகளுக்கு போதுமான உணவு மற்றும் ஊட்டச்சத்தை வழங்க முடியவில்லை.

தொற்றுநோய் காரணமாக கிட்டத்தட்ட ஒரு வருடத்திற்கு பள்ளிகள் மூடப்பட்டன. பல குழந்தைகள் ஏறக்குறைய ஒரு வருடம் அல்லது அதற்கும் மேலாகக் கல்வியை இழந்தனர். அண்மையில் மூன்று மற்றும் நான்காம் வருடங்களில் கற்கும் மாணவர்களில் பலருக்கு சரியாக எழுதவே தெரியவில்லை என்று ஆய்வுகளில் கண்டறிந்தனர்.

பாடசாலைகளுக்குச் செல்ல முடியாத நிலையில் இணையவழிக் கல்வியை அறிமுகப்படுத்துவதன் மூலம் இந்த நிலையைத் தணிக்க ஆட்சியாளர்கள் முயற்சித்தனர். துரதிர்ஷ்டவசமாக, பெரும்பாலான குடும்பங்களுக்கு இந்த வசதியைப் பயன்படுத்துவதற்கான வசதிகள் இல்லை.

இலங்கையின் நகர்ப்புற குடும்பங்களில் 17.8% பேர் கணினி வைத்திருக்கும் அதேவேளையில், கிராமப்புறங்களில் 6.9% மற்றும் தோட்டத்துறை குடும்பங்களில் 1.1% மட்டுமே கணினிகளை வைத்துள்ளனர் என்று மக்கள்தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களத்தின் புள்ளிவிவரங்கள் காட்டுகின்றன.

தேசிய மட்டத்தில், மடிக்கணினிகள் 0.9% வீடுகளில் மட்டுமே கிடைக்கின்றன, இவை முதன்மையாக கொழும்பு மாவட்டத்தில் உள்ளன. இந்த நிலையில் இணைய வழிக் கல்வி எல்லோருக்கும் வாய்க்கவில்லை.

நிலமையை இன்னும் மோசமாக்குவது போல பொருளாதார நெருக்கடி வந்து சேர்ந்தது. ஒரு வருடத்திற்கு முன்பு நாடு திவாலானதாக அறிவிக்கப்பட்டது, இதனால் மேலும் பல குடும்பங்கள் வேலை இழக்கும் நிலை ஏற்பட்டது. இதனால் மீண்டும் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டது எங்கள் குழந்தைகள்தான்.

ஐக்கிய நாடுகளின் குழந்தைகள் நிதியமான யுசெவ்வின் கருத்துப்படி, ஐப்பசி 2022 மற்றும் மாசி 2023 க்கு இடையில் மோசமான உணவுப் பாதுகாப்பின்மை முன்னறிவிப்புடன் கடுமையான பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் இலங்கை இருந்தது.

நம் நாட்டில் 2.3 மில்லியன் குழந்தைகளுக்கு அவசர உதவி தேவைப்படுவதாக ஆய்வு வெளிப்படுத்தியது. நடவடிக்கை இல்லாவிட்டால், மில்லியன் கணக்கானவர்கள் கடுமையான ஊட்டச்சத்து குறைபாட்டை எதிர்கொள்ள நேரிடும், இதனால் அவர்களின் உயிருக்கும் எதிர்கால நலனுக்கும் ஆபத்து ஏற்படுகிறது என்று எச்சரிக்கப்பட்டது.

நம் நாட்டில் குழந்தைகள் சமமான நிலையில் இல்லை என்பதும், ஊட்டச்சத்து குறைபாட்டை எதிர்கொள்வதும்தான் கணக்கெடுப்பு முன்வைக்கும் அப்பட்டமான உண்மை.

இந்த நிலையை அரசின் முயற்சியால் மட்டும் சமாளிக்க முடியாது. நாம் ஒவ்வொருவரும் ஒன்றிணைந்து செயற்படவேண்டும், நாமும், எமது அரசியல்வாதிகளும் இணைந்து இந்த நாட்டிற்குள் கொண்டு வந்துள்ள சூழ்நிலையில் இருந்து விடுபட வேண்டும். நாம் ஒன்றாக பிரச்சினையை எதிர்கொண்டால் மட்டுமே இதைச் செய்ய முடியும்.

இனம், மதம் எதுவாக இருந்தாலும் நாம் இந்த நாட்டின் எதிர்காலமான குழந்தைகள் விடயத்தில் நாம் அதிக அக்கறையுடன் செயற்படவேண்டும். அவர்கள் சமமாக நடத்தப்படவேண்டும். வசதி வாய்ப்புக்கள் அவர்களுக்குச் சமமாகக் கிடைக்கவேண்டும்.

அவர்களை எதிர்காலத்திற்காகத் தயார்ப்படுத்துவதே எமது முக்கிய பணியாக இருக்கவேண்டும். நாம் அதைச் சரியாகச் செய்கிறோமா? எம்மை நாமே கேட்கவேண்டிய கேள்வி இது.



# கடல் மேல் பிறக்க வைத்தான்

**என்.சத்தியமூர்த்தி**

யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புகுழுக்கூட்டத்தில் பேசிய கடற்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இருநாட்டு மீனவர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு, தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு ஒன்று இந்தியா சென்று, ஈழ மீனவர்களின் நிலைமையையும் நிலைபாட்டையும் விளக்கவேண்டும் என்று கூறியுள்ளார். இதற்காக தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு ஒன்றை இந்தியாவிற்கு அழைத்துச்செல்ல தான் கருதுகின்றார் என்றும் அவர் கூறியுள்ளார்.

மீனவர் பிரச்சினையை பேச்சு மூலம் தீர்க்கவேண்டும் என்பதில் இரு வேறு கருத்துகளுக்கு இடமில்லை. அது பேச்சு மூலம் மட்டுமே தீர்க்கப்படவேண்டும் என்பதிலும் குழப்பம் இருக்க கூடாது. பேச்சுக்கு மாறாக, நடுகடலில் மீனவர் போராட்டம், இந்திய மீனவர்களை நடுகடலில் தாக்குவது என்பன போன்ற முன்னெடுப்புகளால் பயனில்லை என்பதும் கடந்த சில ஆண்டுகளில் தெளிவாகி உள்ளது.

அந்த விதத்தில், இரு தரப்பு பேச்சுகளில் எந்த முடிவும் எட்டப்படவில்லை என்பதும் உண்மை. முடிவு என்று மட்டுமல்ல, முன்னேற்றமும் ஏற்படவில்லை.

இதில், இரு நாட்டு அரசுகளும், மீனவர்களும் தனித்தனியாகச் சந்தித்து பேசி உள்ளார்கள். மீனவர் பிரச்சினை குறித்து பேசி தீர்வு காண, இரு நாட்டு அரசு அதிகாரிகளின் பணி குழு ஒன்றும் செயல்பட்டுவருகிறது. அல்லது, செயல்படாமல் உள்ளது. அல்லது, செயல்பட்டாலும் பயன் இல்லாமலே இருக்கிறது.

### குட்டையை குழப்பி...

இந்தப்பின்னணியில், அமைச்சர் கூறியது போல், நாடாளுமன்ற உறுப்பினர்களின் குழு ஒன்று இந்தியா சென்று பேச்சு நடத்தினால், அதனால் ஏதாவது பயன் அல்லது முன்னேற்றம் ஏற்படுமா? அதனால் பயன் ஏதும் ஏற்படாது என்றே தோன்றுகிறது. இன்னும் சொல்லப்போனால், நாடாளுமன்ற உறுப்பினர்கள், அதாவது அரசியல்வாதிகள் தலையிட்டால், அவர்களால் குட்டையைக் குழப்பத்தான் முடியும்.

அரசியல்வாதிகளால் அனைத்துத் தரப்பினரும் ஏற்றுக்கொள்ளகூடிய தீர்வைக்கண்டுபிடித்துவிட முடியாது. அதற்கு அரசியல்வாதிகளுக்கு திறமை இல்லை என்றல்ல பொருள். மாறாக, தங்களது வாக்குவங்கியையே முக்கியமாக கருத்தில் கொண்டு செயல்படும் அவர்கள் உள்குத்து வேலையிலேயே அதிக கவனம் செலுத்துவார்கள்.



இதற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் அனுபவமே சாட்சி. கடற்தொழில் அமைச்சராக பதவியேற்கும் முன்னரே அவர் இந்த பிரச்சினையில் முழுவதுமாக இறங்கி செயலாற்றி உள்ளார். ஏன், நடுகடலில், இலங்கை தமிழ் மீனவர்களின் போராட்டம் என்பது அவரது முன்னெடுப்பு தான்.

அவரது நடுகடல் போராட்டம் இந்தியாவில், குறிப்பாக மத்திய அரசை பதற்றத்திற்கு உள்ளாக்கியது என்பது உண்மையே. ஆனால், பிரச்சினைக்குரிய தமிழ் நாட்டில் பலரும்; அவரது போராட்டம் குறித்து அறிந்திருக்கவில்லை. மாறாக, தமிழ் நாட்டு மீனவர்கள் பலரும், நடுக்கடலில் தாக்கப்பட்டதாக முறைப்பாடுகள் பதிவாகின.

### காவிரி பிரச்சினை

இரு நாட்டு மீனவர்கள் பிரச்சினையில் அரசியல்வாதிகளின் பங்களிப்பு என்று வரும் போது, இந்தியாவிலேயே உள்நாட்டில், அதிலும் குறிப்பாக தமிழ் நாடு மற்றும் அண்டை மாநிலமான கர்நாடகா ஆகியவற்றிற்கு இடையேயான காவிரி நதி நீர் பிரச்சினை குறித்துப் பேசாது இருக்கமுடியாது. குறிப்பாக, அதில் இரு மாநில அரசியல்வாதிகளின், அவர்களது கட்சிகளின் நிலைபாடு குறித்து எல்லாம் அறிந்து கொள்ள வேண்டியது அவசியம்.

காவிரி பிரச்சினையின் நீள–அகலங்கள் மற்றும் ஆழம் குறித்து எழுதுவதென்றால், எழுதிக்கொண்டே போகலாம். ஆனால், அரசியல் ரீதியாக இரு மாநில அரசியல்வாதிகள் எப்படி எல்லாம் குட்டையை குழப்பி உள்ளார்கள் என்பதை புரிந்துகொள்வது அவசியம்.

தமிழ்நாடு மற்றும் கர்நாடகாவிலுள்ள மாநிலக் கட்சிகளின் நிலைபாடு, தனித்தோ சேர்ந்தோ நாளுக்கு நாள் மாறுவதில்லை. ஆனால், தேசிய கட்சிகளான தற்போது மத்தியில் ஆளும் பாரதிய ஜனதா, முன்னர் ஆட்சியில் இருந்த காங்கிரஸ் கட்சிகளின் நிலைபாடு மாநிலத்திற்கு மாநிலம், நாளுக்கு நாள் மாறுவது கேலிகூத்தாகி விட்டது.

அதாவது, காங்கிரஸ் கட்சியும் சரி, பாரதிய ஜனதாவும் சரி, கர்நாடகாவில், தமிழ் நாட்டிற்கு ஒரு சொட்டு தண்ணீர்கூட கொடுக்கக் கூடாது என்று அடித்து பேசுவார்கள். தமிழ் நாட்டில் அவர்களது கட்சி கிளைகள் அதற்கு எதிர்மாறாகப் பேசும்.

இதைவிடக் கொடுமை, தேசிய அளவில் இந்த இரு கட்சிகளின் நிலைமையும் இருதலைக் கொள்ளி எறும்பாக இருக்கும். அவர்களில் யார் ஆட்சியில் இருந்தாலும், அவர்களின் நிலை கம்பி மேல் நடக்கும் சர்கஸ் வீரர் அல்லது வீராங்கனையின் சாகஸத்தை தோற்கடிக்கும். அல்லது தோற்கடிக்க வேண்டும்.

### ஜல்லிகட்டு போராட்டம்

அப்படித்தான், 2016 நவம்பர் மாதத்தில், காவிரி நீர் பிரச்சினை குறித்து இந்தியாவின் உச்ச நீதிமன்றத்தில் வழக்கு நடக்கும்போது, மத்திய அரசின் சட்டதரணி, நடுநிலை வகிக்கும் வண்ணம், ஒரு கருத்தை முன்வைத்தார். ஆனால் அடுத்த நாளே, அவரே, காவிரி பிரச்சினையில் கருத்து கூற உச்ச நீதிமன்றத்திற்கு இடமில்லை என்று அடித்து பேசினார்.

அவ்வாறு மத்திய அரசு தடாலடியாக ஒரு முடிவு எடுக்க சட்டப்படியான காரணங்கள் எதுவாகவேனும் இருக்கட்டும், ஆனால் அவை தவறான முன்னுதாரணங்கள். இந்த முடிவை பாரதிய ஜனதா தலைமையிலான பிரதமர் நரேந்திர மோடியின் அரசு, எடுப்பதற்கு தேர்தல் அரசியலே முக்கிய காரணம்.

அதாவது, 2018ம் ஆண்டில் கர்நாடாகவில் நடக்கவிருந்த சட்டசபை தேர்தலுக்கு, ஆளும் பாரதிய ஜனதா அச்சாரம் போட, உச்சநீதிமன்ற வழக்கு கிடைத்தது. இரு மாநிலங்களில், பாரதிய ஜனதாவிற்கு கர்நாடகாவில் அதிக ஆதரவு இருந்தது. தமிழ்நாடு அந்த கட்சிக்கு நம்பிக்கை கொடுக்கவில்லை.

அதிலும் குறிப்பாக, கர்நாடகாவில் இப்போது போலவே, அப்போதும் காங்கிரஸ் கட்சியின் சித்தராமையா முதல்வராக இருந்தார். அவருக்கு அடுத்த தேர்தலில் ஆப்பு அடிக்க வேண்டியது பாரதிய ஜனதா தலைமையின் கட்டாயம். காரணம், 2018 கர்நாடகாவில் சட்டசபை தேர்தலை தொடர்ந்து, அடுத்த ஆண்டே தேசிய அளவில் நாடாளுமன்ற மக்களவை தேர்தல் வரவிருந்தது.

இதன் காரணமாகவே, மோடி அரசு, காவிரி பிரச்சினையில் தலையிட உச்ச நீதிமன்றத்திற்கு அதிகாரம் இல்லை என்று அடித்துக் கூறியது. அதனால் தமிழகமே உள்ளூறப் புழுங்கியது, கொந்தளித்தது. இதன் வெளிப்பாடும், இரண்டு மாதங்களுக்கு பின்னர், உலகமே வியந்து நோக்கிய தமிழ் நாட்டின் ஜல்லிகட்டு போராட்டத்தில் உணரக்கூடியதாக இருந்தது.

(5ஆம் பக்கம் பார்க்க...)

காலைக்கதிர்
Kalaikkathir

# கட்டுநாயக்க விமான நிலையத்தில் உலக சுற்றுலா தினம் முன்னெடுப்பு






அந்தவகையில், இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகம் உலக சுற்றுலா தினத்தை கொண்டாடும் வகையில் கட்டுநாயக்க விமான நிலையத்தின் வருகை முனையத்தில் சிறப்பு நிகழ்வொன்றை ஏற்பாடு செய்துள்ளது.

இதனையடுத்து கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு வருகை தந்த வெளிநாட்டு சுற்றுலா பயணிகளுக்கு இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியக அதிகாரிகள் விசேட பரிசில்கள், இனிப்புகள் மற்றும் இலங்கை தேநீர் பானங்களை வழங்கி வரவேற்றமை குறிப்பிடத்தக்கது. (05)

# கடல் மேல் பிறக்க வைத்தான்....

(4ஆம் பக்கத் தொடர்ச்சி...)

### வாக்குவங்கி அரசியல்

சரி, இரு நாட்டு மீனவர் பிரச்சினை குறித்துப் பேசும்போது, இந்தியாவின் உள்நாட்டு பிரச்சினை ஒன்றினை குறித்து விலாவரியாக விவரிப்பதற்கு அவசியம் என்ன? காரணம் இருக்கிறது. ஏன் என்றால், இங்கு மட்டும் என்ன வாழ்கிறதாம்?

மீனவர் பிரச்சினையில் எதிர்கட்சியில் இருந்தபோதும், ஆளும் தரப்பில் அமைச்சராக இருந்தபோதும், தற்போது தொடரும்போதும், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கரிசனையுடன் செயல்பட்டு வருகிறார். உண்மை. ஆனால், அது வாக்குவங்கி அரசியலின் ஒரு வெளிப்பாடு என்று கூறுவோர் உள்ளனர்.

அந்தக் குற்றச்சாட்டை உண்மை என்றே வைத்துக்கொண்டாலும், பிறருடைய நிலைபாடுதான் என்ன? தேவானந்தாவின் ஈபிடிபி கட்சி தவிர எந்தவொரு தமிழர் கட்சியும் போர் முடிவுற்ற பின்னர் பல ஆண்டுகள் அது குறித்துப் பேசவில்லை.

பின்னர், திடீரென்று ஞானம் வந்தது போல, தமிழ் அரசு கட்சி மட்டும் இரண்டு மாநாடுகளின் தீர்மானங்களில், மீனவர் பிரச்சினை குறித்து ஒரு பத்தியை சேர்த்திருந்தது. அத்துடன் அதனை விட்டுவிட்டது. ஆனால், அந்த கட்சி தலைமைத்துவம் நல்கிய தமிழ் தேசியக் கூட்டமைப்பு அந்தப் பிரச்சினையை கண்டுகொள்ளவில்லை எனலாம்.

இப்போதும் கூட, கூட்டமைப்பு உடைந்த பிறகு, தமிழ் அரசு கட்சியும் சரி, பிற முன்னாள் அங்கத்துவ கட்சிகளும் சரி, அவர்களுக்கு அப்பாலும் தமிழ் தேசியம் பேசும் கட்சிகளும் சரி, மீனவர் பிரச்சினையை பொருட்டாகவே கருதவில்லை. அவர்களுடைய நிலைபாட்டில், அரசியலுக்கும் அப்பாற்பட்ட பாகுபாடுகள் இருக்கின்றனவா என்று தெரியவில்லை.

### தனி நபர் முயற்சி

என்றாலும், மறக்கப்பட்ட, மறக்கடிக்கப்பட்ட நல்லாட்சி அரசு காலத்தில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் முக்கிய உறுப்பினர்களில் ஒருவரான சுமந்திரன், வெளிநாட்டு மீனவர்கள் இலங்கை கடற்பகுதியில் சட்டத்திற்கு புறம்பாக மீன்பிடிப்பதை தடுப்பதற்காக, அவர்களுக்கான தண்டனை மற்றும் அபராத தொகையை கட்டுக்கடங்காமல் அதிகரிக்கும் விதத்தில் பாராளுமன்றத்தில் தனி நபர் சட்ட முன்மாதிரியை முன் வைத்தார். இது இந்தியாவில், தமிழ் நாடு மீனவர்களையே குறிவைத்தது என்பதே அப்பட்டமான உண்மை.

என்றாலும், அந்த சட்ட முன்வடிவு தனி நபர் முயற்சி மட்டும்தான். காரணம், சுமந்திரனின் பிரேரணைக்கு தமிழ் தேசிய கூட்டமைப்பினுள் இருந்து யாரும் ஆதரவு தெரிவித்ததாக தெரியவில்லை. ஏன், அன்றும் இன்றும் இந்திய மீனவர்களை குறைகூறும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கூட வாளவிருந்தார்.

சுமந்திரனுக்கு அப்போது ஆதரவு கொடுத்த ஒரே நபர், அன்றைய பிரதமர், இன்றைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கே மட்டும்தான். அவர்தான், சுமந்திரனின் பெயரில் இருந்த தனி நபர் சட்ட முன்ஸமாதிரியை மாற்றி எழுதி, அரசு சார்பில் பாராளுமன்றத்தில் தாக்கல் செய்தார். அதுவே ஒருமனதாக சட்டமானது.

அந்த வகையில், இன்றைய ஜனாதிபதியால் முன்னெடுக்கப்பட்ட சட்டத்தை முன்வைத்துக்கொண்டு. இங்குள்ள தமிழ் எம்.பிக்கள், இந்தியாவில் எப்படி முகம் கொடுத்து பேசமுடியும்? அதிலும் குறிப்பாக அவர்களுள் ஒருவரான சுமந்திரன் முன்வைத்த சட்ட வடிவம் என்கிறபோது, அதன் எதிரொலி என்னவாக இருக்கும்?

எது எப்படியோ, இந்தியாவில், குறிப்பாக தமிழ் நாட்டில், பிரச்சினையின் நெளிவு-சுளிவுகளை முழுவதுமாக உணர்ந்து கொண்டுள்ள அரசியல் கட்சிகளும் அவற்றின் தலைமைகளும், இரு நாட்டு மீனவர் பிரச்சினையை தங்களால் குழப்ப முடியுமே தவிர, அதற்கான தீர்வை கொடுக்க முடியாது என்ற எண்ணவோட்டத்தில் இருக்கிறார்களள. அதனாலேயே, அதனை இரு நாட்டு மீனவர்களும் அரசுகளும் மட்டுமே கையாண்டு, தீர்வை நோக்கி நகர முடியும் என்றும் கருதுகிறார்கள்.

இப்போது போய், அங்கு குட்டையை குழப்ப வேண்டுமா? அல்லது கலங்கிய நீரில் மீன் பிடிக்க தான் வேண்டுமா?


குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City

கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்

பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு

15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!

சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்



அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)

பம்பரகந்த, தியலும, துன்கிந்த, இராவணா,
ரம்பொடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்

தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park

கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம்,
ரம்பொடை ஆஞ்சனேயர் கோவில்



தொடர்புகளுக்கு: 0777 43 5557

தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்

பேர்ச் 200,000/-
பரப்பு 20 இலட்சம்

5th Project

இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road, Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இந்த விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 390/=
Chikne Fried Rice with Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swahpoos Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir




# கந்தபுராணக் கலாசாரம்





இந்தியாவில் வேதங்கள் தோன்றின. திருமுறைகள் தோன்றின. இலக்கியம் இலக்கணம் பலவித கலாசாரம் பண்பாடு என்று செல்லிப் பெருமைபட்டுக் கொண்டே போகலாம். இராமாயணம் மகாபாரதம் கந்தபுராணம் பெரிய பராணம் திருவிளையாடற்புராணம் இவை யாவுமே இந்தியாவின் சொத்துக்கள் தான் அனால் இந்த வகையில் எந்தவொரு பெருமைக்கும் உரியதாக விளங்காவிடினம் கந்தபுராண கலாசாரம் என்பதை உருவாக்கி அதன் மூலம் வாழ்க்கை அமைத்த பெருமையினை ஈழத்தில் யாழ்ப்பாணத்திற்க மட்டும உரித்தாக்கி இருக்கின்றது.

இந்தியாவில் தோன்றியது தான் கந்தபுராணம். ஆனால் அதன் பெயரால் ஒரு கலாசாரம் யாழ்மண்ணில் உருப்பபெற்றது என்பது ஆச்சரியமாக இருக்கின்றது அல்லவா? புராணத்தின் பெயரால் ஒரு கலாசாரம் உருவாக முடியமா? அதுவும் கந்தபுராணம் என்னம் சமய நூல்களின் பெயரால் என்று எண்ணத்தோன்றுகின்றது அல்லவாஃ 'புன்னெறி யதனிற் செல்லம் போக்கினை விலக்கி நன்னெறி காட்டும்: பாங்கினைக் கந்த புராணம் கொண்டு விளங்கியது. யாழ்மண்ணில் கொவில்கள் தோறும் கந்த பராணம் படிப்பதும் அதற்குப் பயன்( விளக்கம் ) சொல்லுவதும் இடம்பெற்று வந்தது யாழ்ப்பாண மண்ணில் கலியின் சதியாலும் காலத்தின் கோலத்தாலும் கந்புராணம் படித்த சைவச் சூழல் குழம்பம் நிலை ஏற்பட்டது. அவ்வேளை ஆண்டவனது அனுக்கிரகத்தால் நல்லூரில் ஒரு குழந்தை பிறந்தது.

அதன் உணர்வில் சைவமும் சைவ சித்தார்ந்தமும் இயற்கையிலே ஊறியே நின்றது. வளர்ந்த அந்தக் குழந்தை இளைஞ்ஞனாகத் தமிழ் நாடு சென்று ஆதீனத்தில் பிரசங்கம் செய்து சாவல் என்னும் விருதுடன் யாழ் வந்தது. நாவலர் விருது பெற்ற அந்த இளைஞன் 'நல்லை நகர் தந்த ஆறுமுக நாவலர் 'என்று போறுறுதற்கு உரியவர் ஆகின்றார். அவரால் சைவ சமயம் வளர்ந்தது ஒழுக்கம் உணர்த்தப்பட்டது. இலக்கியம் இதயங்களில் அமர்த்தப்பட்டது. இவரின் வருகையால் யாழ்ப்பாணத்தின் கலாசாரமே எழிர்ச்சி பெற்றது. இந்த கலாசாரத்தை இவரின் வழியில் வந்த பண்டித மணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் கந்த புராண கலாசாரம் என்று பெருமைப்படுத்தினார்.

யாழ்ப்பாண கலாசாரம் இந்திய கலாசாரத்திலிருந்தும் தமிழ்நாட்டுக் கலாசாரத்திலிருந்தும் வேறான தனித்துவ மான கலாசாரத்தில் மிளிர்கின்றது. எனலாம். கலியுகத்தில் கண்கண்ட தெய்வம் கந்தப்பெருமான் அவரெ எங்கள் சொந்தப் பெருமான் என்று எண்ணும் அளவிற்கு யாழ் மண்ணும் அங்கு வாழும் மக்களும் ஆகிவிட்டார்கள். என்பது மறக்க முடியாததாகம். நல்லூரை மைய மாக வைத்த நாவலர் பெரமானின் பல பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. கந்த புராணம் எற்கள் சொந்தம் என்று யாழ்மண்ணில் விதைத்த பெருமை நகவலரின் கலாசாரம் என்றே கூறலாம்.



திண்ணைப்பள்ளிக்கூடங்களே யாழ்மண்ணில் அறிவுப் பொக்கிசங்களாகத் திகழ்ந்த காலத்தில் அங்கு கந்தபராணம் சொல்லிக்கொடுக்கப்பட்டது. கோவில்களில் கந்தசஸ்டி விரதம் அனுஸ்டிக்கப்பட்டது. முருகனின் விரதங்களை மக்கள் உருக்கமாக் கடைப்பிடித்து ஓதினார்கள் விரத்தால் மனம் மொழி மெய் சுத்தமானது. மேன்மை கொள் சை நீதி தளைத்து நின்றது.





யாழ்ப்பாணத்தில் அந்நியரால் ஏற்பட்ட உருக்கலைவை உருப்படியாக்கி சரியான பாதையைக்காட்டி ஒழுக்கத்தையம் பண்பாட்டையும் தமிழ் மொழியையம் தலை நிமிர்திடச்செய்தார். இவ்வாறக அவர் செய்த பணிக்க இட்ட மகுடமே 'கந்தபுராண கலரசாரம்'; ஆகும். இக்கலாசாரம் ஈழத்திற்கு மட்டுமே சொந்தமானது யாழ் மண்ணிற்கு மட்டுமே உரித்தானது. ஆனால் இன்று இந்தக்கலாசாரத்தை அறியாது இதன் பெருமை உணராது இருக்கம் போது வேதனையாக இருக்கின்றது.

நாவலர் பெருமான் ஊன்றிய விதை யாழ் மண்ணில் இன்றும் முளைவிட்ட படியே தான் இருக்கின்றது. அதனால் தான் இன்றுவரை இங்கு நல்லதோர் சமூகம் வாழ்கின்றது. என்றும் எண்ண முடிகின்றது. ஆனாலும் சூறாவளியாக சுனாமியாக வந்த நிற்கும் தவிர்க்க முடியாத சில சக்திகளால் கந்தபராண கலாசாரம் சீர்குலைந்துவிடுமோ என்னும் ஏக்கமே தற்போது எழுந்து நிற்கின்றது.

ஒழுக்கம் கட்டுப்பாடு உயர் சிந்தனை பக்தி அறம் நேர்மை யாவும் தந்தது தான் கந்தபுராணக் கலாசாரம். அதனைக் காப்பத நம் கடமையாகும். சிந்திப்போம செயற்படுவோம் நல்லூர்க்கந்தனுக்கு கொடியேற்ற உற்சவம் நடக்கவிருக்கும் அவ்வேளையிலாவது. கந்தபுராண கலாசாரத்தை எண்ணிடுவோம். யாழ்மண்ணில் நல்லூரின் பெருமையைக் காத்திடுவோம். புன்னெறி வழியை வெறுத்திடுவோம். புனித்தை மனதில் நிறுத்திடுவோம்.

சி. சர்மிதா
நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி.

காலைக்கதிர் Kalaikkathir

## பின்லாந்து.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்றியமும் . பின்லாந்தும் உன்னிப்பாக அவதானித்து வருகின்றன என்றும் தமிழ் மக்கள் அமைதியான பாதுகாப்பான வாழ்க்கை வாழ்வதையே தாம் விரும்புகின்றனர் என்றும் ரீனா ஜோர்டிக்கா அங்கு தெரிவித்தார்.

பின்லாந்து தேசத்தில் தற்போது தங்கி நிற்கும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்இன்றும்நாளையும் அங்குள்ள வெளிநாட்டு அமைச்சுப்பிரதிநிதிகளையும், அரச மற்றும் அரசசார்பற்ற அமைப்புகளின் பொறுப்பு வாய்ந்த மேலாளர்களையும் நாடாளுமன்ற உறுப்பினர்களையும் சந்தித்துப் பேசவுள்ளார்.

இச்சந்திப்புகளினூடாகத் தமிழர் தாயகத்தில், சிறிலங்கா அரசினால் மேற்கொள்ளப்படும் சட்ட விரோத நடவடிக்கைகளையும். மனிதவுரிமை மீறல்களையும் ஆதார பூர்வமாக விளக்கவுள்ளார்

## தேர்தல் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

2024 ஆம் ஆண்டு நிச்சயம் ஜனாதிபதி தேர்தல் இடம்பெறும். தேர்தலைப் பிற்போட வேண்டிய தேவை அரசுக்குக் கிடையாது. அரசமைப்பின் பிரகாரம் தேர்தல் நடத்தப்படும். எந்த அரசியல் கட்சியும் இதுவரை ஜனாதிபதி வேட்பாளரை உத்தியோகப்பூர்வமாக அறிவிக்கவில்லை.

ஆட்சி அதிகாரத்தை ஏற்கத் தயார் என்று தற்போது குரல் எழுப்பும் எதிர்க்கட்சித் தலைவர் உட்பட எதிரணியினர் கடந்த ஆண்டுநாடுபெரும்பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடியை எதிர்கொண்ட போது ஆட்சியைப் பொறுப்பேற்கவில்லை. நாடுதீப்பற்றி எரிந்து கொண்டிருந்தபோது எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச நிபந்தனை விதித்து கடிதம் எழுதிக் கொண்டிருந்தார்.

நெருக்கடியான சூழ்நிலையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே எவ்வித நிபந்தனைகளுமில்லாமல் ஆட்சியைப்பொறுப்பேற்றார். ஜனாதிபதியின் சிறந்த முகாமைத்துவத் திட்டங்களினால் நாடு தற்போது வழமைக்குத்திரும்பியுள்ளது. நிலையான பொருளாதார மீட்சிக்கான திட்டங்கள் செயற்படுத்தப்பட்டுள்ளன.

2024ஆம் ஆண்டு ஜனாதிபதியாகும் தகைமை ரணில் விக்கிரமசிங்கவுக்கே உண்டு. நாடு தற்போது வழமைக்குதிரும்பியுள்ளது. ஜனாதிபதியாக பிறிதொருவர் தெரிவு செய்யப்பட்டால் நிலையான பொருளாதார மீட்சிக்காக முன்னெடுக்கப்பட்டுள்ள சகல திட்டங்களும்பலவீமடையும். ஜனாதிபதி தேர்தலுக்கான உத்தியோகப் பூர்வ அறிவிப்பு வெளியானதும்புதியஅரசியல் கூட்டணி உதயமாகும். பலர் அரசியல் கூட்டணியில் ஒன்றிணைவார்கள் - என்றார்.

## உலகம்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்யப்பட்டவரவேற்புநிகழ்வு நேற்று நடைபெற்றபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் முன்னாள்ஜனாதிபதிகளான, சந்திரிகா பண்டாரநாயக்க, மைத்திரிபால சிறிசேன, மஹிந்த ராஜபக்ஷ, கோட்டாபயராஜபக்ஷமற்றும் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா உள்ளிட்டவர்கள் பங்கேற்றிருந்தனர்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

3வருடதொற்றுநோய்க்குப் பிறகு இலங்கையில் எங்கள் நாட்டினது முதலாவது தேசிய தின வரவேற்பு நடைபெறுகின்றது,

சீனாவும் இலங்கையும் நீண்டகால நட்புறவை அனுபவித்து வருகின்றன. பண்டைய காலங்களில், சீனாவும் இலங்கையும் ஒரு நீண்ட வரலாற்றையும், அற்புதமான கலாசாரத்தையும், சிறந்த நாகரிகத்தையும் உருவாக்கியுள்ளன. நவீன காலத்திலிருந்து, காலனித்துவம் மற்றும் ஏகாதிபத்தியத்திற்கு எதிராகப் போராடுவதற்கு சீனாவும் இலங்கையும் ஒருவரையொருவர்வலுவாக ஆதரித்து வந்துள்ளன. 1948 இல் இலங்கை சுதந்திரம் பெற்றது. ஒருவருடம்கழித்து, அக்டோபர் 1, 1949 அன்று, சீன கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையில் புதிய சீனா நிறுவப்பட்டது.

கடந்த 74 ஆண்டுகளில் சீனா வரலாற்றுச் சாதனைகளை படைத்துள்ளது. சராசரி ஆயுட்காலம் 35 முதல் 78 ஆண்டுகள் வரை அதிகரித்துள்ளது, இது 120 சதவீதத்துக்கும் அதிகமான விரைவான வளர்ச்சியாகும். சீனா 800 மில்லியன் மக்களைவறுமையிலிருந்து மீட்டுள்ளதுமற்றும்வரலாற்று ரீதியாக முழுமையாக வறுமையை ஒழித்துள்ளது.

தன்னைத்தானே வளர்த்துக் கொள்ளும் அதேவேளையில், உலக அமைதி மற்றும் வளர்ச்சிக்கு சீனா எப்போதும் உறுதி பூண்டுள்ளது. ஐ.நா.வின் வழக்கமான வரவு, செலவுத் திட்டத்தில்இரண்டாவதுபெரிய பங்களிப்பாளராகவும், ஐ.நா. பாதுகாப்புச்சபையின்நிரந்தர உறுப்பினர்களில் அதிக துருப்புக்களைக் கொண்ட நாடாகவும் சீனா உள்ளது.

கடந்த 10 ஆண்டுகளில் உலக வளர்ச்சியில் சீனாவின் பங்களிப்பு 30 சதவீதத்திற்கும் அதிகமாக உள்ளது. இருப்பினும், சீனா இன்னும்1.4பில்லியனுக்கும் அதிகமான மக்கள்தொகை கொண்டமிகப்பெரியவளரும் நாடாக உள்ளது.

எவ்வளவு பெரிய முன்னேற்றமாக இருந்தாலும், 1.4 பில்லியனால் வகுக்கும் போது, அது மிகச் சிறியதாகிவிடும். மறுபுறம், எந்த சிறிய சவா லும் 1.4 பில்லியனால் பெருக்கப்படும்போது பெரியதாக மாறும்.

சீன நாகரிகம் மட்டுமே உலகின்ஒரேதொடர்ச்சியான நாகரீகமாக கருதப்படுகிறது. இது பழமையானது மற்றும் புதியது. இன்று, சீனா ஒரு புதிய வரலாற்று தொடக்கப் புள்ளியில் நிற்கிறது. முன்னோக்கிச் செல்லும்பாதையில்உள்ளசிரமங்களையும் சவால்களையும் எதிர்கொண்டு, நவீனமயமாக்கலுக்கான சீனப் பாதையின் மூலம் அனைத்து வகையிலும் நவீன சோசலிச நாட்டைக் கட்டியெழுப்புவதற்காக சீன மக்கள்முழுநம்பிக்கையுடன் உள்ளனர். சீனாவின் அபிவிருத்திக்கான விரைவுத் தொடருந்தில் இலங்கைஉட்படஅனைத்து நாடுகளையும்நாம்மனதார வரவேற்கிறோம்.

இப்போதைய உலக வரலாற்றின் மாற்றங்கள் முன்னெப்போதும்இல்லாத வகையில் வெளிப்பட்டு வருகின்றன, இது வேகமாக வளர்ந்து வரும் நிச்சயமற்ற தன்மை,உறுதியற்றதன்மை மற்றும் கணிக்க முடியாத தன்மைக்கு வழிவகுக்கிறது.

இந்த உலகளாவிய சவால்களைக் கருத்தில் கொண்டு, ஜனாதிபதிஷிஜின்பிங்மூன்று முக்கியமான உலகளாவிய முன்முயற்சிகளை முன்வைத்துள்ளார்,அதாவது உலகளாவிய மேம்பாட்டு முன்முயற்சி, உலகளாவிய பாதுகாப்பு முன்முயற்சி மற்றும் உலகளாவிய நாகரிக முன்முயற்சி என்பன அவையாகின்றன.

அனைத்து நாடுகளும் ஒருவரையொருவர் மதிக்கவும், வேறுபாடுகளை ஒதுக்கி வைத்துக்கொண்டு பொதுவான நிலையைத் தேடவும், நமது காலத்தின் சவால்களைச் சந்திக்கவும், மனிதகுலத்திற்கானபகிரப்பட்ட எதிர்காலத்துடன் கூடிய சமூகத்தை உருவாக்கவும் ஒன்றிணைந்து செயல்படுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

இந்த ஆண்டு, ஜனாதிபதி ஷி ஜின்பிங்கால் முன்மொழியப்பட்ட ஒரே மண்டலம் மற்றும் பாதை முன்முயற்சியின் 10ஆவது ஆண்டு நிறைவைக் குறிக்கிறது. இந்த முன்முயற்சியின் ஒத்துழைப்பின் கீழ் கடந்த பத்துஆண்டுகளில்,இலங்கை உட்பட 150 க்கும் மேற்பட்ட நாடுகள் மற்றும் 32 சர்வதேச நிறுவனங்கள் இணைப்பு, உட்கட்டமைப்பு, வர்த்தகம் மற்றும்முதலீடுஆகியவற்றில் பெரும் முன்னேற்றம் அடைந்துள்ளன,

சுமார் 3,100 கூட்டுத் திட்டங்களால் உலகிற்கு உறுதியான நன்மைகள் கிடைத்துள்ளன. இலங்கைக்கான சீனத் தூதுவர் என்றவகையில், கட்டுநாயக்க அதிவேக நெடுஞ்சாலை, தெற்கு அதிவேகப் பாதை, அம்பாந்தோட்டை துறைமுகம் மற்றும் கொழும்பு துறைமுக நகரம் போன்ற முக்கிய திட்டங்களை முன்னிலைப்படுத்தி சுட்டிக் காட்டுவதில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

உலகம் எப்படி மாறினாலும், சீனாவும் இலங்கையும் பரஸ்பர மரியாதை மற்றும் நம்பிக்கையுடன் நல்ல அண்டை நாடுகளாகவும், பரஸ்பர நன்மையுடன் நல்ல பங்காளிகளாகவும், ஒருவருக்கொருவர் உதவும் நல்ல நண்பர்களாகவும் உள்ளன.

இலங்கை தொடர்பான சீனாவின் நட்புக் கொள்கையானது அனைத்து அரசியல் கட்சிகள் மற்றும் இலங்கையின் அனைத்து மக்களுக்கும் மற்றும் தொடர்ச்சியையும் ஸ்திரத்தன்மையையும் பேணுவதாகும்.

கடந்த தசாப்தங்களில், பண்டாரநாயக்க சர்வதேச மண்டபம், உச்ச நீதிமன்ற வளாகம், தமரைத்தடாக அரங்கு, பொலன்னறுவை சிறுநீரக நோய்க்கான மருத்துவமனை மற்றும் தேசிய வைத்தியசாலை வெளிநோயாளர்பிரிவுகட்டடம் போன்றபலஅடையாளங்கள் சீன மக்களால் இலங்கை மக்களுக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன.

கொரோனா பரவியதில் இருந்து, குறிப்பாக கடந்த ஆண்டு இலங்கை பொருளாதார சவால்களை எதிர்கொண்டபோது, சீனா இயன்றவரை இலங்கைக்கு ஆதரவளித்தது.

சீனாவின் அனைத்து தரப்பினரிடமிருந்தும் அவசர உதவிகளை வழங்குவது மட்டுமன்றி, இலங்கையின் கடன் பிரச்சினைகளை சரியான முறையில்கையாள்வதற்காக முதன்முதலில் அதை அணுகுவதும்இதில்அடங்கும்.

மிக முக்கியமாக, 'வறுமைப் பொறி' மற்றும் 'அபிவிருத்தி அல்லாத பொறி' ஆகியவற்றிலிருந்து விடுபட்டு, அதன் சுதந்திரம், இறையாண்மை, பிராந்திய ஒருமைப்பாடுஆகியவற்றைப் பாதுகாப்பதற்கும், அதன் சொந்த தேசிய நிலைமைகளுக்கு ஏற்ற அபிவிருத்திப் பாதையில்இலங்கைக்குசீனா தொடர்ந்தும் ஆதரவளிக்கும் - என்றார்.

## இந்தியா, ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

'பேர்லின் குளோபல்' மாநாட்டின் முதல் நாளில் அரச தலைவர்களுக்கான கலந்துரையாடலிலேயே அவர்இதனைத்தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

கடந்தஇருதசாப்தங்களாக உலகபொருளாதாரம்பெரும் நெருக்கடிகளை சந்தித்து வருகின்றது.

2008ஆண்டுஐரோப்பா கடன் நெருக்கடிக்கு முகம் கொடுத்திருந்தது. அதனையடுத்து கொவிட்-19 பரவல் மற்றும் காலநிலைப் பேரிடர்கள்உள்ளிட்டபாதிப்புக்களின் விளைவாகஇறையாண்மைக் கடன் நெருக்கடிகளுக்கு முகம்கொடுக்க வேண்டியிருந்தது.

அண்மைய வரலாறுகளில் இவ்வாறானதொரு நிலைக்கு ஒருபோதும் முகம்கொடுத்திருக்கவில்லை என்பதோடு இவ்வாறான நெருக்கடிகள் வரும்போதெல்லாம் அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளே பெருமளவில் பாதிப்புக்களை எதிர்கொண்டிருந்தன.

அதிக பணவீக்கம், எண்ணெய்விலைஒருகொள்களனுக்கு 100 அமெரிக்க டொலர்களாக உயர்வடைந்தமை, உலக வங்கியின் நிதி மட்டுப்பாடு உள்ளிட்ட பிரச்சினைகளுக்கு நாம் முகம்கொடுத்துள்ளோம். இலங்கையின் ஐரோப்பாவுக்கான ஏற்றுமதியில் இவ்வருடம்வரையில்எவ்வித அதிகரிப்பும் இல்லாமல் இருப்பதை உதாரணமாகக் கூறமுடியும்.

அதனால் அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகள் பெரும் நெருக்கடிக்கு முகம்கொடுத்திருப்பதைஅறிய முடிவதோடு,அதிகரித்துவரும் ஏற்றுமதிச் செலவு, உணவு, வலுசக்தி பாதுகாப்பின்மை மற்றும்இறக்குமதிஉள்ளிட்ட பிரச்சினைகளுக்கு முகம்கொடுக்கவேண்டியுள்ளதோடு அதனால் ஏற்படும் பாதிப்புக்கள் இலங்கை போன்ற நாடுகளை வலுவற்ற பொருளாதாரத்தை கொண்ட நாடுகளாக மாற்றி விடுகின்றன.

வலுவான பொருளாதாரத்தை கொண்டுள்ள நாடுகள் அனைத்து வகையான தற்காப்பு வழிமுறைகளையும் நிதி கையிருப்புக்களையும்பேணிவருகின்றன. எம்மைபோன்றநாடுகளுக்கு அவ்வாறானகையிருப்புக்கள் இல்லை. அதன் விளைவாகவே விளைவாக இறையாண்மைக் கடன் நெருக்கடிகள்ஏற்படுகின்றன. விரைவில்பொருளாதாரத்தை சீரமைக்கத் தவறினால் உலகபொருளாதாரம்பெரும் நெருக்கடிக்குத்தள்ளப்படும்.

அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகள் பெரும் கடன் சுமையில் உள்ளன. இவ்வாறான புதிய முறைமைக்கு முகம்கொடுக்கும்பொறிமுறை சர்வதேச நாணய நிதியத்திடமும் இல்லை. இலங்கை வங்குரோத்து நிலையைஅறிவித்தநேரத்தில் இலங்கைக்குகிடைக்கவிருந்த அனைத்துநிதிச்சலுகைகளும் தடைப்பட்டன. அதனால் நாட்டுக்குள் அரசியல் நெருக்கடியும் தோன்றியது.

இலங்கை நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு உலக வங்கியின் உதவியும் இலங்கையின் பழைய நண்பரான சமந்தா பவரின்உரமானியஉதவியும் கிடைத்திருக்காவிட்டால் நான் இந்தப் பதவியுடன் இங்கு வந்திருக்க வாய்ப்பு கிடைத்திருக்காது.

வங்குரோத்து நிலையை அறிவிக்கும் நாடுகளுக்கு உதவிகளை வழங்குவதற்கான எந்த முறைமையும் இந்த உலகில் இல்லை. இருப்பினும் இவ்வாறான நிலைமைகளுக்கு மத்தியில் பசுமை காலநிலை நிதியத்தில் பெரும் பங்கு வகிக்கும் ஜேர்மனியின் செயற்பாடு மகிழ்ச்சியளிப்பதாக உள்ளது.

காலநிலைப்பேரிடர்களை மட்டுப்படுத்தல் மற்றும் கடன் நீடிப்பு உள்ளிட்ட இரு சவால்களுக்கும் இலங்கை போன்ற நாடுகள் முகம்கொடுக்க வேண்டியுள்ளதோடு, அதற்காகபயன்படுத்துவதற்கு எம்மிடத்திலுள்ள நிதியங்கள் போதுமானதாக இல்லை என்பது வருந்தற்குரிய காரணமாகும்.

எவ்வாறாயினும்சர்வதேச நாணயநிதியத்திடம்எமக்கான 100 பில்லியன்கள் உள்ளன. ஒன்றுமே இல்லை என்று கூறிக்கொண்டிருப்பதற்கு மாறாகஇருக்கும்தொகையை கொண்டு வேலைத் திட்டங்களைத் தொடங்கிய பின்னர் அடுத்த தொகையை பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

இலங்கை தொடர்பில் கவனம் செலுத்தும்போது ஆபிரிக்க வலயத்தின் குறைந்த வருமானம் ஈட்டும் நாடுகளின் தேவைகள் கணிசமாக அதிகரித்து வருகின்றன. அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளின் தேசிய இலக்குகளை அடைவதற்கான தேவைகளை பூர்த்தி செய்துகொள்வதற்கு 5.9 ட்ரிலியன் டொலர்கள் அவசியப்படுகின்றன.

அதேபோல் நிகர பூச்சிய உமிழ்வை அடைந்துகொள்வதற்கு வலுசக்தி தொழில்நுட்பத்திற்காக 4 ட்ரிலியன்கள் அவசியப்படுகின்றன. இலங்கையின் காலநிலை சுபீட்சத்துக்கானஇலக்குகளை அடைந்துகொள்வதற்கான நிதித் தேவைகள் குறித்தும் அவதானம் செலுத்த வேண்டும்.

2030 ஆம் ஆண்டில் இலங்கைக்கு 26.5 டொலர் பில்லியன்கள் அவசியப்படும். சர்வதேச நாணய நிதியம் கூறுவதை போல நாம் அதிஷ்டமான நாடு என்றால் அடுத்த சில வருடங்களுக்குள் 3.5மூ பொருளாதார வளர்ச்சியை அடைந்துகொள்ள முடியும் என்றும்எதிர்பார்த்துள்ளோம். அதேபோல் இந்த பிரச்சினைகளைதீர்ப்பதற்காக உலக அளவில் உள்ள தலைமைத்துவங்களும் தொடர்பாடல்களும் போதுமானதல்ல. அதனால் புதிய திட்டமிடல் ஒன்று அவசியப்படுகின்றது.

தற்போதுள்ள சர்வதேச நிதித் திட்டமிடல் 80 வருடங்களுக்கு முன்பாக தயாரிக்கப்பட்டுள்ளது என்பதையும் நாம் ஏற்றுக் கொண்டுள்ளோம். ஆசியா, மத்திய கிழக்கு, தென் அமெரிக்கா மற்றும் ஆபிரிக்காவின் சில நாடுகள் வளர்ந்து வரும் பொருளாதாரத்துடன் உலக பொருளதார வல்லுனர்களாக மாறியுள்ளதன் பலனாக பல்வேறு மாற்றங்களை அவதானிக்க முடிந்தது. இருப்பினும் சர்வதேச திட்டங்களுக்கமைய சில மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. தற்போதுள்ள சர்வதேச திட்டமிடல்கள் கடன்நீடிப்பை கடினமாக்கியுள்ளன. அதனால் சவால்களுக்கு முகம்கொடுப்பதற்கு நாம் அனைவரும் ஒன்றுபட்டுச் செயற்படுவோம் - என்றார்.

தேசிய பாதுகாப்பு தொடர்பிலானஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, வெளிவிவகார அமைச்சின் செயலாளர் அருணி விஜேவர்தன, பொருளாதார அலுவல்கள் தொடர்பிலானஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் கலாநிதி ஆர்.எச்.எஸ்.சமரதுங்க, ஜனாதிபதியின் பிரத்தியேகச் செயலாளர் சென்ரா பெரேரா ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டிருந்தனர்.

## பொருளாதாரம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்ததாவது:

இந்த ஆட்சியினால் வருமானம் தொடர்பில் தற்போதைய அரசாங்கம் தோல்வி அடைந்துள்ளதாக சர்வதேச நாணய நிதியமே தெரிவித்துள்ளது. அரசு தனது நண்பர்களுக்கும், நெருங்கியவர்களுக்கும் பெருமளவில் நிவாரணத்தினை வழங்கியுள்ளது.

இதனால் நாடு பொருளாதார ரீதியாக சீர்குலைந்துள்ளதாக சர்வதேச நாணய நிதியமே சுட்டிக்காட்டியுள்ளது.

அரசின்வருமானத்தினை அதிகரிப்பதற்காக நாட்டில் வரியை அதிகரிப்பதால் பயனில்லை. நாட்டின்வருமானத்தினைஅதிகரிப்பதற்கான நடவடிக்கைளை முன்னெடுக்கவேண்டும். பொருளாதார விரிவாக்கத்தால் மாத்திரமே நாட்டின் வருமானத்தினை அதிகரிக்க முடியும். ஆகவே தற்போதைய அரசினால் சிறப்பாக செயற்படமுடியாது என்பதுநிரூபணமாகியுள்ளது.

உள்நாட்டு வருமானத்தினை அதிகரிப்பதற்காக மக்கள் மேல் வரிக்கு மேல் வரி விதிக்கப்பட்டது. நீர்க்கட்டணத்திற்கும், மின்சாரக்கட்டணத்திற்கும்வரி விதிக்கப்பட்டுள்ளது. தற்போது மீண்டும்மின்சாரக்கட்டணம் அதிகரிக்கப்படவேண்டும்என்று கூறுகின்றார்கள்.

இவ்வாறான செயற்பாடுகளால் நாட்டு மக்கள் தொடர்ந்தும் வீழ்ச்சியைச் சந்தித்து நெருக்கடிகளுக்குச் செல்கின்றனர். ஆனால் நாட்டின் தலைவர்கள் தொடர்ந்தும் வெளிநாடுகளுக்கான பயணத்தினை மேற்கொண்டு வருகின்றனர் -என்றார்.

## நாடாளுமன்றில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதுவரை காலமும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாகச் செயற்பட்டு வந்த நிலையில் தொடர்ந்தும் அவ்வாறு செயற்படமுடியாதுஎன்பதால் பிறிதொரு அணியாக செயற்பட தீர்மானித்திருக்கின்றனர்.

இதற்கமைய அடுத்த நாடாளுமன்ற அமர்வின் போது தனி அணியாக செயற்படப்போவதாக சபாநாயகருக்கு அறிவித்தலை வழங்கிவிட்டு இனிவரும் நாள்களில்நாடாளுமன்றத்தில் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு என்றில்லாமல் தனியான அணியாகசெயற்படுவதென அவர்கள் தீர்மானம் எடுத்துள்ளனர்.

அதேபோன்றுஎதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலின்போது தமிழர் தரப்பிலிருந்து பொது வேட்பாளரை இறக்குவதெனவும் இதற்கமைய தமிழர்தரப்பிலுள்ள ஏனைய கட்சிகளுடன் கலந்துரையாடல்களை நடாத்துவதெனவும்தீர்மானித்துள்ளனர்

# 12 கோடியே 30 லட்சம் ரூபா பெறுமதியான தங்கத்துடன் 4 பெண்கள் உள்ளிட்ட ஐவர் விமான நிலையத்தில் கைது

12 கோடியே 30 லட்சம் ரூபா பெறுமதியான நகைகள் மற்றும் தங்க பிஸ்கட்களை சட்டவிரோதமான முறையில் நாட்டுக்கு கடத்திய 4 பெண்கள் உள்ளிட்ட 5 பேர் விமான நிலையத்தில் வைத்து சுங்க அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

குறித்த 5 பேரும் டுபாயிலிருந்து புதன்கிழமை 27 ஆம் திகதி இரண்டு விமானங்களில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளனர்.

டுபாயிலிருந்து புதன்கிழமை அதிகாலை 1.10 மணிக்கு வருகை தந்த முதலாவது விமானத்தில் 3 பெண்களும் ஓர் ஆணும் வருகைதந்துள்ளதுடன் அதிகாலை 5.25 மணிக்குவந்தவிமானத்தில்பெண்ணொருவர் வருகை தந்துள்ளார்.

இவர்கள் அனைவரும் கொழும்பு பிரதேசத்தில் வசிப்பவர்கள் என்பதுடன் அடிக்கடி விமானங்களில் பயணிக்கும் வர்த்தகர்கள் குழுவென விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

6 கிலோ எடையுள்ள நகைகள் மற்றும் தங்க பிஸ்கட்டுகளை உடலிலும், பயணப் பொதிகளிலும் மறைத்து வைத்திருந்த போது, சுங்க அதிகாரிகளால் கண்டுபிடிக்கப்பட்டு கைது செய்யப்பட்டுள்ளனர்.

கட்டுநாயக்க விமான நிலைய சுங்க போதைப்பொருள் கட்டுப்பாட்டு பிரிவின் அதிகாரிகள் கைதுசெய்யப்பட்ட 5 பேரையும் தடுத்து வைத்து மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

(05)

# இலங்கையில் பாலியல் தொழிலாளிகளின் அடிப்படை உரிமைகள் மீறப்படுகின்றன

## பெண்கள் கூட்டமைப்பு தெரிவிப்பு

இலங்கையில் பாலியல் தொழிலாளர்களின் அடிப்படை உரிமைகள்மீறப்படுகின்றனஎன பெண்கள் கூட்டமைப்பொன்று குற்றம்சாட்டியுள்ளது.

சட்டவிரோதமாக தடுத்து வைக்கப்படுதல் இரக்கமற்ற மனிதாபிமானமற்ற அவமானகரமாக நடத்தப்படுதல் போன்ற அடிப்படை உரிமை மீறல்களை இலங்கையின் பாலியல் தொழிலாளர்கள் எதிர்கொண்டுள்ளனர் என அபிமானி என்ற பெண்கள் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

கைதுசெய்யப்பட்டதும் பாலியல் தொழிலாளர்கள் தங்கள் அடிப்படை உரிமைகள் மீறப்படுவதை அடிக்கடி எதிர்கொள்கின்றனர்எனதெரிவித்துள்ள அபிமானிபெண்கள்கூட்டமைப்பு நியாயமாகநடத்தப்படுவதற்கான உரிமைகள் உரிய நடைமுறைகள் மனிதாபிமானற்ற மற்ற விதத்தில் நடத்தப்படுவதிலிருந்து பாதுகாப்பு போன்றவை மீறப்படுகின்றன எனவும் தெரிவித்துள்ளது.

தங்களைகைதுசெய்தபின்னர் போதைப்பொருள் வைத்திருந்த பொய்யான குற்றச்சாட்டின்கீழ் தங்களை நீதிமன்றத்தில் நிறுத்துவதாகவும் பொலிஸாரும் வாடிக்கையாளர்களும் தங்களை துன்புறுத்துவதாகவும் பாலியல் தொழிலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

எங்கள் கைதுகள் குறித்து விசாரணைகள் இடம்பெற்றதும் நாங்கள் போதைப்பொருள் வைத்திருந்தோம் என குற்றம் சாட்டப்பட்டுள்ளோம் என பொலிஸார்தெரிவிக்கின்றனர்எனசகுனி மாயாதுன்ன என்ற பாலியல் தொழிலாளி தெரிவித்துள்ளார்.

பாலியல் தொழில் என்பது சட்டபூர்வமற்றது என்பதால் பாலியல் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் துன்புறுத்தல்களை எதிர்கொள்வார்கள் என சிறுவர் பெண்கள் துஸ்பிரயோக தடுப்பு பிரிவை சேர்ந்த ரேணுகா ஜெயசுந்தர தெரிவித்துள்ளார்.

எனினும் நாட்டில் அனைத்து பிரஜைகளிற்கும் அடிப்படை உரிமை உள்ளது தடுத்து வைப்பவர்களை தாக்குவதற்கு நாங்கள் பொலிஸாருக்கு அனுமதியளிக்கவில்லை மேலும் பெண் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரை பணிக்கு அமர்த்தவேண்டும் இவை நடக்காவிட்டால் முறைப்பாடு செய்யலாம் என அவர் தெரிவித்துள்ளார்.

(05)

# பாணந்துறை ஆதார வைத்தியசாலை அவசர சிகிச்சை பிரிவில் தாதி கைது



பாணந்துறை ஆதார வைத்தியசாலையில் தாதி ஒருவரின் பணப்பையை களவாடி அவரது தேசிய அடையாள அட்டையை பயன்படுத்தி தனியார் வங்கியில் கடன்பெற்று மோசடிசெய்த மற்றுமொரு தாதி கைது செய்யப்பட்டார் எனப் பாணந்துறை தெற்கு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பாணந்துறை ஆதார வைத்தியசாலையின் அவசர சிகிச்சை பிரிவில் பணிபுரியும் தாதி ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது -

கடந்த ஓகஸ்ட் 16 ஆம் திகதி 2,000 ரூபாவுக்கும் அதிகமான பணம் மற்றும் அடையாள அட்டை உள்ளிட்ட ஆவணங்களுடன் தமது பணப்பை வேலை செய்யும் இடத்தில் காணாமற்போனதாக குறித்த சிகிச்சைப் பிரிவில் தொழில் புரிந்து வரும் தாதி ஒருவர் பாணந்துறை பொலிஸில் முறைப்பாடளித்துள்ளார்.

இதனையடுத்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்ட நிலையில் கடந்த இரண்டு நாள்களுக்கு முன்னர், பாணந்துறையில் உள்ள தனியார் வங்கியொன்றில் இருந்து முறைப்பாடு செய்த தாதிக்கு, 'நீங்கள் வாங்கிய கடனுக்கான தவணை சரியாக செலுத்தப்படவில்லைஎனவும், அதனை செலுத்துமாறும் நினைவூட்டல் கடிதம் அனுப்பப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

இதற்கமைய மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் பின்னர் அதே பிரிவில் தொழில் புரியும் தாதி ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதோடு அவர் புதன்கிழமை பாணந்துறை நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டுள்ளதாக பாணந்துறை தெற்கு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

(05)



காலைக்கதிர் Kalaikkathir

# கிளிநொச்சி திருவள்ளுவர் வித்தியாலய இயங்குநிலைமையை உறுதிப்படுத்துக

## சிறீதரன் எம்.பி. கோரிக்கை







கிளிநொச்சி திருவள்ளுவர் வித்தியாலயத்தின் இயங்குநிலையை உறுதிப்படுத்துமாறு நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

மலையாளபுரம் கிராம மக்களின் கோரிக்கைக்கு அமைவாக, நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரனால் அப்பகுதி மக்களுடனான சந்திப்பொன்று அண்மையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

தொடர்ச்சியாகத் தாம் எதிர்கொள்ளும் அடிப்படை இடர்பாடுகள் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினரின் கவனத்துக்குக் கொண்டு வந்த மலையாளபுரம் மக்கள், அக்கிராமத்தில் இயங்கும் ஆரம்பப் பாடசாலையான திருவள்ளுவர் வித்தியாலயத்தை நிரந்தரமாக மூடுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாக சுட்டிக்காட்டியிருந்தனர்.

அன்றையதினமே குறித்த பாடசாலையை நேரில்சென்று பார்வையிட்ட நாடாளுமன்ற உறுப்பினர், பாடசாலை அதிபரின் கோரிக்கைக்கு அமைவாக மாணவர்களுக்கான குடிநீர்க்கிணறு ஒன்றை புதிதாக அமைப்பதற்குரிய ஏற்பாடுகளை புலம்பெயர் நன்கொடையாளர் ஒருவரின் நிதியுதவியோடு உடனடியாகவே மேற்கொண்டிருந்தார்.

இந்தக் கலந்துரையாடலைத் தொடர்ந்து மேற்படி பாடசாலையின் இயங்குநிலையை உறுதிப்படுத்துமாறு, வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளருக்கு, நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரனால் கோரிக்கைக் கடிதமொன்று அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு -

1983 இல் நாட்டில் ஏற்பட்ட இனவன்முறைகளால் பாதிக்கப்பட்டு கிளிநொச்சி மாவட்டத்திற்கு இடம்பெயர்ந்த மக்களில் ஒருதொகுதியினரே, கிளி/திருவள்ளுவர் வித்தியாலயம் அமைந்துள்ள மலையாளபுரம் கிராமத்தில் வாழ்ந்து வருகிறார்கள். கல்வி, பொருளாதாரம், அடிப்படை வசதிகள் என்பவற்றில் விளிம்பு நிலையிலுள்ள இக் கிராம மக்களிடம் அப்பாடசாலையில் நிலவும் அடிப்படைப் பௌதீகவளத் தேவைகளைச் சீர்செய்யக் கூடிய பொருளாதார இயலுமை காணப்படவில்லை.

மலையாளபுரம் கிராமத்தையும் அதன் சுற்றயல் பகுதிகளையும் சேர்ந்த நூற்றுக்கணக்கான மாணவர்கள், இப் பாடசாலையைத் தாண்டி 2 ட கிலோவிற்கும் அதிக தூரத்திலுள்ள ஏனைய பாடசாலைகளுக்குச் செல்கிறார்கள். குடிநீர் வசதியின்மை, பாடசாலை வளாகத்தை எல்லைப் குபடுத்துவதற்கோ அல்லது பாடசாலையின் பௌதீக வளங்களை முறையாகப் பேணுவதற்கோ உரியவகையில் சுற்று வேலி அமைக்கப்படாமை, கடந்த ஐந்து ஆண்டுகளில் ஆங்கிலம் மற்றும் விசேட கல்வி உட்பட முறையான ஆசிரிய ஆளணி நியமிக்கப்படாமை (அண்மையில் ஆறு ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்), ஆளணிப் பற்றாக்குறையால் இரண்டு மூன்று வகுப்புகளை ஒன்றாக இணைத்துக் கற்பிக்க வேண்டிய மோசமான நிலை உட்பட கற்றல், கற்பித்தலுக்குரிய தகுந்த சூழல் கட்டியெழுப்பப்படாமையே இதற்கான மிகப்பிரதான காரணமாகும்.

இந்தக் குறைபாடுகள் தொடர்பில் பாடசாலை அதிபர் மற்றும் நிர்வாகத்தினரால் பலதடவைகள் திணைக்கள மட்டங்களின் கவனம் கோரப்பட்டிருந்தும் கூட, பாடசாலையை நிரந்தரமாக மூடுவதிலுள்ள ஆர்வமும் வேகமும், பாடசாலையின் அடிப்படைக் கட்டுமானங்களிலோ, வளப் பங்கீடுகளிலோ, அபிவிருத்தியிலோ காட்டப்படவில்லை என்பதை குற்றஞ்சாட்டும் நோக்கிலன்றி பாடசாலையினதும் அப்பகுதி மாணவர்களினதும் நலனோம்புகை நோக்கில் தங்களுக்கு மனவருத்தத்துடன் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மேற்குறித்த விடயங்களின் அடிப்படையில், மலையாளபுரம் கிராம மக்களின் அடிமட்ட வாழ்வுநிலை, முறையான கல்வி மூலம் அடுத்த தலைமுறையைக் கட்டமைக்க வேண்டிய கட்டாய தேவைப்பாடு என்பவற்றோடு அப்பகுதி மக்களின் விருப்பையும் எதிர்பார்ப்பையும் கருத்திற்கொண்டு, கிளி/திருவள்ளுவர் வித்தியாலயத்தின் இயங்குநிலையை உறுதிப்படுத்துமாறு தங்களைத் தயவுடன் கேட்டுக் கொள்கின்றேன். - என்றுள்ளது. (05)

# அதி தீவிர மந்த போசணையால் பாதிக்கப்பட்ட அதிகளவு சிறுவர்கள் கம்பஹாவில் அடையாளம்

அதிதீவிர மந்த போணையால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் அதிகளவில் காணப்படும் மாவட்டமாக கம்பஹா மாவட்டம் அடையாளம் காணப்பட்டுள்ளதாக கொழும்பு மாநகர சபையின் வைத்திய அதிகாரி ருவான் விஜேமுனி தெரிவித்துள்ளார்.

இந்த வருடத்தில் கம்பஹா மாவட்டத்தில் இவ்வாறு பாதிக்கப்பட்ட 1439 சிறுவர்கள் இனம் காணப்பட்டுள்ளனர் என அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை கொழும்பு மாவட்டத்தில் 320 சிறுவர்கள் மந்த போசணையால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர்களில் அதிகமானோர் கொழும்பின் வடக்கு பகுதியைச் சேர்ந்தவர்கள் எனவும் தெரியவந்துள்ளது.

அத்துடன் மந்தபோசணையால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு பிரதேசசுகாதாரபிரிவுகாரியாலயம் வழங்கும் நிவாரணதிட்டங்களுக்கு பெற்றோர்கள் அழைத்து வருவதில்லை எனவும் போக்குவரத்து செலவீனங்களே இதற்குக் காரணம் எனவும் கம்பஹா மாவட்ட அபிவிருத்தி குழுக் கூட்டத்தில் தெரியவந்துள்ளது.

இதனையடுத்து போக்குவரத்து செலவீனங்களை வழங்க செஞ்சிலுவை சங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாகப் பிரதேச சுகாதார சேவை பணிப்பாளர் சந்தன கஜநாயக்க தெரிவித்துள்ளார். (05)

# பட்டப் பகலில் வீட்டினுள் புகுந்து 13 பவுண் நகை, பணம் திருட்டு

## சுன்னாகத்தில் சம்பவம்

யாழ்ப்பாணம், சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் உள்ள வீடொன்றில் வசிப்பவர் பாடசாலையிலிருந்து தனது பிள்ளைகளை அழைத்து வரச்சென்ற வேளையில், அவ்வீட்டினுள் நுழைந்த திருடர்கள் 13 பவுண் நகை மற்றும் ஒருதொகை வெளிநாட்டு நாணயங்களைத் திருடிச் சென்றுள்ளனர்.

இந்த திருட்டு தொடர்பில் வீட்டு உரிமையாளரால் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (05)

# கற்பிட்டி சூட்டு பயிற்சித் தளத்தில் குண்டு வெடிப்பு; சிப்பாய் இறப்பு

## விசாரணை நடக்கும் என அறிவிப்பு

கல்பிட்டி பிரதேசத்தில் கந்தகுளி பகுதியில் உள்ள விமானப்படையின் துப்பாக்கிச் சூட்டு பயிற்சி தளத்தில் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற வெடிப்பு சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்த குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாக விமானப்படைத் தளபதி எயார் மார்ல் உதேனி ராஜபக்ஷ தெரிவித்தார்.

குறித்த சம்பவத்தில் 28 வயதுடைய விமானப்படை சிப்பாய் ஒருவர் உயிரிழந்ததுடன் மற்றொருவர் படுகாயமடைந்தார்.

சம்பவ இடத்துக்கு இரண்டு நிபுணர்கள் அனுப்பப்பட்டதாக விமானப்படைத் தளபதி எயார் மார்ல் உதேனி ராஜபக்ஷ தெரிவித்தார்.

இந்த சம்பவத்திற்கான காரணம் காரணம் கண்டறியப்படவில்லை என்றும் இது தொடர்பான விசாரணைகள் தீவிரமாக இடம்பெற்று வருகின்றதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (05)

# பிள்ளையானின் உத்தரவாதத்தை ஏற்க மறுத்த பண்ணையாளர்கள்



பண்ணையாளர்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை எடுப்பதற்கு உத்தரவாதம் வழங்குவதாக நெடுஞ்சாலைகள் மற்றும் வீதி அபிவிருத்தி இராஜங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்த போதும் எமது நிலம் ஆக்கிரமிப்பு செய்வதுடன் எங்களது கால்நடைகளுக்கு தீங்கு விளைவிப்போர் அவ்விடத்தில் இருந்து வெளியேறிய பின்பே நாம் எல்லோரும் மேச்சல்தரைக்கு செல்வோம். அதுவோம் அரச அதிகாரிகளே எங்களை அழைத்துச் செல்லவேண்டும் அதுவரை அங்கு செல்லமாட்டோம் என போராட்டத்தில் ஈடுபட்டு வரும் பண்ணையாளர்கள் இராஜங்க அமைச்சரிடம் பதில் தெரிவித்தனர்.

மயிலத்தமடு, மாதவனை கால்நடை மேய்ச்சல் தரை விடயமாக ஜனாதிபதியின் செயலாளர் மூலம் ஜனாதிபதியுடன் தொலைபேசியூடாக தொடர்பு கொண்டு மகாவலி அதிகார சபையுடன் பேசியதையடுத்து அங்கிருப்பவர்களை வெகு விரைவாக வெளியேற்றுவது என்றும் பண்ணையாளர்களுக்கு வந்திருக்கின்ற நம்பிக்கையீனத்தை குறைப்பதற்கு பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக சட்டரீதியான நடவடிக்கை எடுப்பதாகவும் அதற்கு அவ்விடத்தில் தற்காலிக பொலிஸ் சோதனைச் சாவடி அமைப்பது என்று முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

சித்தாண்டியில் பண்ணையாளர்களால் மேற்கொள்ளப்பட்டு வரும் தொடர்ச்சியான அறவழிப் போராட்டத்திற்கு பொருத்தமான தீர்வொன்றை பெற்று கொடுக்கும் வகையில் செவ்வாய்கிழமை மாலை பண்ணையாளர்களுடன் கலந்துரையாடிய பின்பு ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கருத்து தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறுகையில் -

கிழக்கு மாகாணத்தில் சிங்கள, தமிழ் மக்களிடையே முரன்பாடுகள் ஏற்படாமல் தவிர்த்து நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் நோக்குடன் அறவழிப் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் பண்ணையாளர்களுக்கு நம்பிக்கை ஏற்படுத்தும் வகையில் கால் நடைகளை குறித்த பிரதேசத்திற்கு எடுத்துச் சென்று இருசாராருக்கும் பிணக்குகள் ஏற்படாதவகையில் நிர்வாக செயற்பாடுகளை மேற்கொள்ளவுள்ளதாகத் தெரிவித்தார்.

அத்துடன் தான் மாவட்ட அபிவிருத்தி குழுத்தலைவராக இருப்பதாலும் மக்கள் கனிசமான அளவு வாக்களித்துள்ளனர் என்ற அடிப்படையில் இவ்விடயம் தொடர்பாக கிழக்கு மாகாணத்தில் சிங்கள, தமிழ் மக்களிடையே முரன்பாடுகள் ஏற்படாமல் தவிர்த்து பொருளாதாரத்தை மேம்படுத்த பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான உத்தரவாதம் வழங்குவதாகத் தெரிவித்தார்.

இவ்வியடத்தில் நம்பிக்கையிருந்தால் தங்களது போராட்டத்தை கைவிடுமாறும் இல்லையென்றால் தங்களது ஜனநாயக போராட்டத்தை தொடரமுடியும் என்றும் தெரி வித்தார்.

தற்போது பெரும்போக வேளான்மை செய்கைக்காக உழவு வேலைகள் ஆரம்பிக்கப்பட் டுள்ளதால் கால் நடைகளை அகற்றவேண்டிய தேவை உள்ளதாகவும் அதற்கு நீங்கள்தான உதவிபுரிய வேண்டும் என்று பண்ணையாளர்களால் கோரிகை விடுக்கப்பட்டது.

அத்துடன் அங்கு சட்டவிரோத நில ஆக்கிரமிப்பு செய்வதுடன் எங்களது கால்நடைகளுக்கு தீங்கு விளைவிப்போர் அவ்விடத்தில் இருந்து வெளியேறிய பின்பே நாம் எல்லோரும் மேச்சல் தரைக்கு செல்வோம். அரச அதிகாரிகளே எங்களை அழைத்துச் செல்லவேண்டும் அதுவரை அங்கு செல்லமாட் டோம் என போராட்டத்தில் ஈடுபட்டு வரும் பண்ணையாளர்கள் அமைச்சரிடம் பதில் தெரிவித்தனர்.

கால்நடை பண்ணையாளர்களின் அறவழிப் போராட்டம் புதன்கிழமையுடன் 13 ஆவது நாளாக சித்தாண்டியில் பால் பண்ணைக்கு முன்பாக தொடர்ந்து இடம்பெற்று வருகின்றது. (05)

காலைக்கதிர்
Kalaikkathir

# கட்சிகளில் ஜனநாயகம் இல்லை மஹிந்த தேசப்பிரிய சுட்டிக்காட்டு

தேர்தலுக்காக அரசியல் கட்சிகள் முன்வைக்கும் கொள்கை பிரசாரங்களையதார்த்தமானவையாகமாற்றுவதற்காகமுன்னெடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து பெப்ரல் அமைப்பின் தலைமையில் கலந்துரையாடல் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

குறித்த கலந்துரையாடலில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய -

எதிர்காலக் கொள்கை பிரசாரங்கள் குறித்து சுருக்கமாகக் கூறினால் திருமணத் தரகர்கள் போன்று இருபுறமும் பேசும் கதை போன்று இருக்கின்றது.

அதைத்தருகின்றோம் இதைத் தருகின்றோம் என்று கூறுவார்கள். அதில் அதிகமான விடயங்கள் செய்ய முடியாதவை.

கிரிகெட் சபைக்கு வாக்கெடுப்பு நடத்தி பகிரங்கமாகத் தான் தெரிவு செய்வார்கள்.

அரசியலில் போன்று ஒரு பட்டியலை எடுத்துக் கொண்டு வந்து அதில் உள்ளவர்களை அதிகாரிகளாக நியமிக்க மாட்டார்கள்.

கட்சிகளில் எவ்வித ஜனநாயகமும் இல்லை. காலி வீதியில் இருந்து பத்தரமுல்லை வரையில் இருக்கும் காரியாலயங்களில் மட்டுமே இலங்கையில் ஜனநாயகம் இருக்கின்றது.

அரசியல் கட்சியில் தங்களுக்கு ஓர் அசாதாரணம் நிலவும் போது அனைத்து விடயங்களையும் வெளியில் கூறி விடுவார்கள்.

கொள்கைப்பிரசாரத்திற்குஎதிராக அனைத்து நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படும் போது இது பிழை என்று யார் கூறினார்கள்.

விவசாயிகளும் இளைஞர்களும் வீதிக்கு வந்த பிறகே அது கூறப்பட்டது. அனைவரும் இந்தச் சந்தர்ப்பத்தில் தான் எதிர்க்கட்சிக்கு சென்று அமர்ந்தார்கள்.

இல்லாவிட்டால் யாரும் செல்ல மாட்டார்கள். - என அவர் மேலும் தெரிவித்தார். (05)

# தகவல் தொடர்பு சாதனங்களை களவாக இறக்கிய மூவர் கைது

## விமான நிலையத்தில் சிக்கினர்

சட்டவிரோதமான முறையில் இறக்குமதி செய்யப்பட்ட தகவல் தொடர்பு சாதனங்களுடன் மூவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

கைது செய்யப்பட்டவர்கள் 22, 27 மற்றும் 46 வயதுடைய கொழும்பு 10 பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

விமான நிலையத்திலிருந்து வெளியேற முற்பட்ட போது கட்டுநாயக்க விமான நிலைய பொலிஸாரால் வாகனம் சாதனைக்குட்படுத்தப்பட்டதை அடுத்து சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்பட்ட பொருள்களுடன் குறித்த குழுவினர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்களிடம் இருந்து 9 மடிக்கணினிகள், 121 கையடக்க தொலைபேசிகள், 100 சிறிய கையடக்க தொலைபேசிகள், 240 சார்ஜர்கள், தொலைபேசி பேட்டரிகள் மற்றும் போன் கவர்கள் என்பன பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

சம்பவம் தொடர்பில் கட்டுநாயக்க விமான நிலைய பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (05)

# கல்முனை பாடசாலை மாணவர்களுக்கு போசனை நிறைந்த பிஸ்கெட் வழங்கல்





நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி மற்றும் போசனை முகாமைத்துவம் என்பனவற்றை கருத்தில் கொண்டு பாடசாலை மாணவர்களின் போசாக்கை மேம்படுத்தும் நோக்கில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையால் முன்னெடுக்கப்பட்டு வரும் போசாக்கு உணவு வழங்கும் விசேட வேலைத்திட்டத்தின் ஊடாக தெரிவு செய்யப்பட்ட சில பாடசாலைகளுக்கு போசாக்கு நிறைந்த பிஸ்கட்டுகள் வழங்கி வைக்கப்பட்டன.

கிழக்கு மாகாண கௌரவ ஆளுநர் செந்தில் தொண்டமானின் வேண்டுகோளுக்கு அமைவாகவும் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சு மற்றும் மாகாண சுதேச மருத்துவ திணைக்களத்தின் வழிகாட்டலுக்கமைவாகவும் அக்கறைப்பற்று ஆயுர்வேத மருந்து உற்பத்தி பிரிவால் தயாரிக்கப்பட்ட போசாக்கு பிஸ்கட்டுகளை பாடசாலை மாணவர்களுக்கு வழங்கி வைக்கும் நிகழ்வு செவ்வாய்க்கிழமை கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம்.றிபாஸ் தலைமையில் இடம்பெற்றது. கல்முனைப் பிராந்தியத்தில் தெரிவு செய்யப்பட்ட அட்டாளைச்சேனை கமு/அக்/அல்-முனீரா பெண்கள் உயர் பாடசாலை, நிந்தவூர் கமு/கமு/ஜெர்மன் நட்புறவு கனிஷ்ட பாடசாலை, அட்டப்பள்ளம் கமு/கமு/ஸஹிதா வித்தியாலயம் என மூன்று பாடசாலைகளின் மாணவர்களுக்கே மேற்படி போசாக்கு பிஸ்கட்டுகள் வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் பிரதிப்பணிப்பாளர் எம்.பீ.அப்துல் வாஜித், தொற்றா நோய்ப் பிரிவு பொறுப்பு வைத்திய அதிகாரி வைத்தியர் எம்.ஐ.எம்.எஸ். இர்ாத், கல்முனை பிராந்திய ஆயுர்வேத பொறுப்பு வைத்திய அதிகாரி வைத்தியர் எம்.ஏ.நபீல், அட்டாளைச்சேனை ஆயுர்வேத வைத்திய சாலை வைத்திய அத்தியட்சகர் வைத்தியர் ஐ.எல்.அப்துல் ஹை, ஆயுர்வேத வைத்தியர்கள் மற்றும் பாடசாலை அதிபர்கள் ஆசிரியர்கள் மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

ஆயுர்வேத மருந்துப் பிரிவினால் தயாரிக்கப்பட்ட பல்வேறு போசாக்குகூறுகள் அடங்கிய குறித்த பிஸ்கட்டுக்கள் சுவை மற்றும் தரம் வாய்ந்ததாக உள்ளதாகவும் அவற்றைத் தொடர்ந்தும் வழங்க வேண்டும் எனவும் பாடசாலை மாணவர்கள் இதன்போது குறிப்பிட்டனர். (05)

# வெட்டுக் காயத்துடன் மனைவி ஓட்டமாவடியில் கணவன் கைது

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஓட்டமாவடி - 1 அல் முக்தார் வீதியில் பெண்ணொருவர் வெட்டுக் காயங்களுடன் மீட்கப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் புதன்கிழமை இடம்பெற்றுள்ளது.

கணவனும், மனைவியும் வீடொன்றில் வசித்து வந்த நிலையில் இருவருக்குமிடையில் ஏற்பட்ட முரண்பாடே இந்தச் சம்பவத்துக்கு காரணம் என்று பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளின் போது தெரிய வந்துள்ளது.

குறித்த பெண்ணை குளியலறையில் வைத்து கணவன் கத்தியால் கழுத்தையும், கையையும் வெட்டிய போது பலத்த காயங்களுக்குள்ளான பெண் தன் உயிரை காப்பாற்றிக்கொள்ள கூக்குரலிட்ட போது அயலவர்கள் சென்று பெண்ணை காப்பாற்றி மீட்டுள்ளனர்.

57 வயது மதிக்கத்தக்க குறித்த பெண் பலத்த காயங்களுடன் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு உடனடியாக மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு இடமாற்றப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் தாக்குதல் நடத்திய கணவன் வாழைச்சேனை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதுடன், மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றன. (05)

# ரிக்கெற் பெறாத ரயிலில் பயணிகளை பிடிக்கும் நடவடிக்கை தீவிரமாகின்றது

பயணச்சீட்டு இல்லாமல் ரயிலில் பயணிக்கும் பயணிகளிடம் சோதனை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ரயில்வேத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

விசேடமாக மருதானை மற்றும் கொழும்பு கோட்டை ரயில் நிலையங்களில் விசேட பயணச்சீட்டு சோதனைகள் மேற்கொள்ளப்படும்.

கொவிட் -19 தொற்றுநோய் காரணமாக ரயில் பயணிகளின் பயணச்சீட்டு சோதனை நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டது. இதன் விளைவாக பயணச்சீட்டு இல்லாமல் ரயிலில் பயணிக்கும் பயணிகள் அதிகரித்துள்ளதாக ரயில்வேத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஓகஸ்ட் மாதம் முதல் இதுவரை மருதானை ரயில் நிலையத்தில் பயணச்சீட்டு பெறாமல் பயணித்த 72 பயணிகளிடமிருந்து கிட்டத்தட்ட 2 லட்சத்து 25 ஆயிரம் ரூபா தண்டப்பணம் அறவிடப்பட்டுள்ளதாக ரயில்வே நிலைய அதிபர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. (05)

# கல்முனை பிரதேச செயலக விவகாரம்: 35 நிமிடங்கள் சுமந்திரன் கடும் விவாதம்

## பதில்வாதம் ஒக்ரோபர் 03, 06 திகதியன்று

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித்தலைவரும், திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ், கல்முனை மாநகர சபை முன்னாள் உறுப்பினர் ஏ.கலீலுர் ரஹ்மான் ஆகியோர் இடையீட்டு மனுதாரர்களாக நுழைந்த கல்முனை உப பிரதேச செயலக வழக்கு எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 03 ஆம், 06 ஆம் திகதிக்கு தவணையிடப்பட்டுள்ளது.

கல்முனை உப பிரதேச செயலக தரமுயர்வு தொடர்பில் பல்வேறு சிக்கல்கள் நீடித்துவரும் சூழ்நிலையில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் மேன்முறையீட்டு நீதிமன்றில் கல்முனை விவகாரம் தொடர்பில் சில மாதங்களுக்கு முன்னர் தாக்கல் செய்திருந்த வழக்கு புதன்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது அவரின் சட்டத்தரணியாக ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் இடைக்கால தீர்வு வேண்டி சுமார் 35 நிமிடங்களுக்கு மேலாக 49 காரணங்களை முன்வைத்து தமக்கு சாதகமான ஆவணங்களை நீதிமன்றுக்கு சமர்ப்பித்து தன்னுடைய தரப்பு வாதத்தை ஆக்ரோசமான முறையில் மன்றில் முன் வைத்து இடைக்கால தீர்வை வலியுறுத்தினார்.

குறித்த வழக்கின் இடையீட்டு மனுதாரர்களான நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ், மற்றும் முன்னாள் மாநகரசபை உறுப்பினர் சிரேஷ்ட விரிவுரையாளர் ஏ.கலீலுர் ரஹ்மான் ஆகியோர்கள் சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி சஞ்சீவ ஜெயவர்தன, ஜனாதிபதி சட்டத்தரணி பைஸர் முஸ்தபா மற்றும் அவரது சட்டத்தரணிகள் குழு ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரனின் வாதத்திற்கு பதில் வாதத்தை நீதிமன்றில் முன்வைக்க நேரம் போதாமை காரணமாக எதிர்வரும் 03 ஆம், 06 ஆம் திகதிகளில் மீண்டும் விசாரணைக்கு இந்த வழக்கு எடுத்துக்கொள்ளப்பட இருக்கிறது. அந்த நாள்களில் இடையீட்டு மனுதாரர்கள் சார்பிலான சட்டத்தரணிகள் தமது வாத்தை முன்வைக்க உள்ளனர்.

இது விடயமாக மனுதாரர், இடையீட்டு மனுதாரர்களின் வாதம் முடிவடைந்த பின்னர் நீதிமன்றம் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரனின் கோரிக்கையை ஏற்றுக்கொள்வதா இல்லையா என்பது தொடர்பில் தீர்மானிக்கும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம்.ஹரீஸ் ஊடகங்களுக்கு தெரிவித்தார். (05)

# சைகைமொழி தினத்தில் விழிப்புணர்வுப் பேரணி

## மட்டக்களப்பில் நடந்தது

சர்வதேச சைகைமொழி தினத்தை முன்னிட்டு மட்டக்களப்பில் புதன்கிழமை மாபெரும் விழிப்புணர்வு பேரணியொன்று முன்னெடுக்கப்பட்டது.

கிழக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களமும் இலங்கை தமிழ் செவிப்புலனற்றோர் அமைப்பும் இணைந்து ஏற்பாடு செய்திருந்த இந்நிகழ்வில் சுமார் 10 மாவட்டங்களைச் சேர்ந்த ஆயிரக்கண்கான சைகை மொழியாளர்கள், சமூக சேவைகள் திணைக்களத்தின் மட்டக்களப்பு மாவட்ட பணிப்பாளர் அருள்மொழி உட்பட பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

குறித்த பேரணி மட்டக்களப்பு நகர் ஊடாக மட்டக்களப்பு மாநகரசபை மண்டபம் வரையில் நடைபெற்றதுடன் அங்கு விசேட நிகழ்வுகளும் ஏற்பாடுசெய்யப்பட்டிருந்தன. (05)

# 900 குழந்தைகளுக்கு புற்றுநோய் பாதிப்பு

ஆண்டுதோறும் புற்றுநோயால் பாதிக்கப்பட்ட சுமார் 900 குழந்தைகள் கண்டறியப்பட்டுள்ளனர் என சுகாதார அமைச்சின் தேசிய புற்றுநோய்க் கட்டுப்பாட்டுத் திட்டம் தெரிவித்துள்ளது.

பிறந்தது முதல் 19 வயதிற்கு உட்பட்டவர்களுக்கு ஏற்படும் புற்றுநோய் குழந்தை புற்றுநோய் என அடையாளப்படுத்தப்படுகின்றது எனவும், அந்தவகையில் புதிதாக 471 ஆண் பிள்ளைகளும் 454 பெண் பிள்ளைகளும் குழந்தை புற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும் சமூக வைத்திய நிபுணர் சுராஜ் பெரேரா தெரிவித்துள்ளார். அத்துடன் குழந்தை புற்று நோயாளர்கள் தொடர்பில் ஒவ்வொரு வருடமும் செப்ரெம்பர் மாதம் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (05)

# தாயை கூரிய ஆயுதத்தால் தாக்கிய மகன் மட்டக்களப்பில் கைதானார்

மட்டக்களப்பில் தாயாரைக் கூரிய ஆயுதத்தால் தாக்கிய மகனைப் பொலிஸார் கைது செய்துள்ளனர். ஜயந்திபுர பிரதேசத்திலேயே இந்தச் சம்வம் பதிவாகியுள்ளது.

சம்பவ தினமான செவ்வாய்க்கிழமை குறித்த நபர் குடும்பதகராறு காரணமாக தனது சகோதரியை அவரின் வீடு தேடிச் சென்று கூரிய ஆயுதத்தால் தாக்க முற்பட்டுள்ளார்.

இதன்போது அதனைத் தடுக்க முற்பட்ட தாயாரின் மீதும் அந்நபர் தாக்குதல் நடத்தியுள்ளார். இதனால் படுகாயமடைந்த தாயார் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

இதனையடுத்து குறித்த நபரைக் கைது செய்துள்ள பொலிஸார் இது குறித்த மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 29.09.2023இல் வெளியிடப்பெற்றது.